Registered as a NewsPaper

விலை: ரூபா 7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள் –12

நாதம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | ஆவணி–17 | 02–09–2004 | வியாழக்கிழமை | ஓசை –197

க ணே சா ந கை யு க ம்
தங்கநகை உலகில் தமக்கென தனியிடம் பதித்தவர்கள்
இல:123, பஜார் வீதி, வவுனியா.
T.P.-024-2222464
இல:194, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.-021-2225987


# எமது தேசம் விடுதலை அடையும் வேளையில் எம் மக்கள் சொந்தக் காலில் நிற்கும் ஆற்றலைப் பெற்றுவிடுவர்!

## அரசியல்துறை பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் நம்பிக்கை

எமது தேசம் விடுதலையடைந்திருக்கும் காலத்திலே எங்களது வளத்தைக்கொண்டு எமது மக்கள் தமது சொந்தக் காலிலே நிற்கக்கூடிய ஆற்றலைப் பெற்றுவிடுவார்கள் என்பதில் எமக்கு நம்பிக்கை இருக்கிறது என நேற்று வட்டக்கச்சி ஒருங்கிணைந்த மாதிரிப்பண்ணையில் ஆரம்பமான விவசாயக் கண்காட்சியில் கலந்துகொண்டு உரையாற்றிய அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்;

எங்களுடைய தேசத்திலே போராட்டம் தொடங்கிய ஆரம்ப காலத்திலிருந்தே எங்கள் தேசியத் தலைவர் எங்கள் மக்களினுடைய தேவைகளினையும், துறைசார் வளர்ச்சிகளையும் ஏற்படுத்திக் கொள்வதற்காக பல்வேறு கட்டமைப்புக்களை போராட்ட சூழலிலே கட்டியெழுப்பியிருக்கின்றார்.

அந்த வகையிலே தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமும் போராட்ட சூழலிலும் எங்களுடைய மக்களுடைய வாழ்வு நிலையை மேம்படுத்திக் கொள்வதற்கும், போர்ச்சூழலில் பாரிய பொருளாதார நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்கின்ற மக்களுடைய வாழ்வு நிலையைப் பாதுகாத்துக் கொள்வதற்கும் பல வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வந்திருக்கின்றது. அந்த வகையில் போராட்ட சூழலில் பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில்; உணவுத்தடை, பொருளாதாரத் தடை, கோரமான யுத்தம், பெரும் அவலங்களுக்கு முகங்கொடுத்து எமது மக்கள் இந்த மண்ணிலே எப்படி வாழ்ந்தார்களென்பது எல்லோராலுமே வியப்பாகப் பார்க்கப்படுகின்ற விடயம்.

அக்கால கட்டத்திலும் எங்களுடைய தேசியத் தலைவருடைய வழிகாட்டலிலே தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் எங்களுடைய பொருளாதாரத்தை ஏனையோரில் தங்கி நிற்கும் தங்குநிலை

(12ஆம் பக்கம் பார்க்க)

# சமாதான முயற்சிகளில் சில திருப்பங்கள் விரைவில் ஏற்படலாம் என நோர்வே நம்பிக்கை!

## எரிக்கின் இல.வருகையின்போது சாத்தியமாகலாம்

(கொழும்பு)

**சமாதான முயற்சிகளில் சில முக்கிய திருப்பங்கள் இடம்பெறலாம் என நோர்வே எதிர்பார்ப்பதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. எதிர்வரும் 13ஆம் திகதி நோர்வேயின் விசேட தூதுவர் எரிக்சூல்ஹெய்ம் இலங்கைக்கு வருகைதரவுள்ளார். இதன் போது இத் திருப்பங்கள் இடம்பெறலாம் என நோர்வே எதிர்பார்க்கிறது.**

அதிகரித்துவரும் சர்வதேச நெருக்குவாரங்கள் மற்றும் நிதிப் பற்றாக்குறை போன்றவற்றால் ஆட்சியை நடத்த முடியாத அவல நிலைக்கு தள்ளபட்டுள்ள சனாதிபதி சந்திரிக்கா குமாரணதுங்கவின் முன்னாலுள்ள ஒரே தீர்வு சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பது மட்டுமே. இதன் மூலம் சர்வதேச நிதியுதவிகளை உடனடியாக பெற்று நாட்டின் பொருளாதார பிரச்சினைக்குத் தீர்வு காண சனாதிபதி ஆர்வம் காட்டுவதாக தெரியவந்துள்ளது. ஆட்சியின் பங்காளி

(12ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியாவின் தலையீட்டை கோருவதில் ஐ.தே.க. ஆர்வம்!

சமாதான முயற்சிகளை மீள ஆரம்பிப்பது குறித்து இந்தியாவின் நேரடித் தலையீட்டை ஐக்கிய தேசியக் கட்சி கோரவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த விடயம் தொடர்பிலேயே ஐ.தே.க.யின் சிரேஷ்ட உறுப்பினரான மிலிந்த மொறகொட இந்தியாவிற்கு சென்றுள்ளதாக கூறப்படுகிறது.

இந்தியாவில் தங்கியுள்ள மிலிந்த மொறகொட, அங்கு இந்திய அரசின் முக்கிய தலைவர்களைச் சந்தித்து, தற்போது இலங்கையில் எழுந்துள்ள அரசியல் குழப்ப நிலையில், இந்தியா நேரடியாகத் தலையிட்டு இணக்கப்பாட்டைக் காண முன்வர வேண்டுமென்று வேண்டுகோள் விடுக்கவுள்ளதாக தெரியவந்துள்ளது.

இதுகுறித்து கருத்துவெளியிட்டுள்ள 'மிலிந்த மொறகொட, இது ஒரு முதற்கட்டப் பேச்சுவார்த்தை முயற்சி மட்டுமே என்றும், முக்கிய பேச்சுக்கள் தொடர்ந்தும் இடம் பெறும எனத் தெரிவித்துள்ளார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்க அரசாங்கத்தை வற்புறுத்துவோம்

*– பிரான்ஸ் உதவி உயர் ஸ்தானிகர் தெரிவிப்பு*

சமாதானப் பேச்சுவார்த்தைகளை உடனடியாக ஆரம்பிக்க தாம் அரசாங்கத்தை வலியுறுத்தப்போவதாக பிரான்ஸ் நாட்டின் உதவி உயர்ஸ்தானிகர் தெரிவித்துள்ளார்

நேற்று பிரான்ஸ் நாட்டின் உதவி ஸ்தானிகர் கொயோல்ட்டி மெஸ்சோனா தமிழ்க் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்களான ஜோசப் பரராஜசிங்கம் மற்றும கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோரைக் கொழும்பில் வைத்து சந்தித்தார்

இதன்போது ஐரோப்பிய ஒன்றியம் அண்மையில் வெளியிட்ட இலங்கை தொடர்பான அறிக்கையில் தமிழீழ விடுதலைப் புலிகள் மாத்திரமே கொலைகளில் ஈடுபடுவதாகக் கூறியிருப்பது

(12ஆம் பக்கம் பார்க்க)

## நான்கு நாள் விவசாயக்கண்காட்சி நேற்று வட்டக்கச்சியில் சிறப்புற ஆரம்பம்

மாபெரும் விவசாயக் கண்காட்சி நேற்று வட்டக்கச்சி ஒருங்கிணைந்த மாதிரிப்பண்ணையில் ஆரம்ப மாகியது.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம், கால் நடை உற்பத்தித் திணைக்களம், விவசாயத் திணைக்களம், கைத்தொழில் திணைக்களம் என்பன இணைந்து நடாத்தும்

(12ஆம் பக்கம் பார்க்க)



## தமிழீழ வைப்பகத்தின் 10ஆவது கிளை முல்லைத்தீவில் நேற்றுத் திறந்துவைப்பு



(அலுவலக செய்தியாளர்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் இயங்கிவரும் தமிழீழ வைப்பகத்தின் மூன்று கிளைகளில் மட்டும் 200 மில்லியனுக்கு மேற்பட்ட நிதி முதலீடு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு நேற்று முல்லைத்தீவில் நடைபெற்ற தமிழீழ வைப்பகக்கிளைத் திறப்பு விழாவில் உரையாற்றும் போது தமிழீழ வைப்பகப் பணிப்பாளர் ம.வீரத்தேவன் அவர்கள் தெரிவித்

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஏறாவூரில் வீட்டிற்குள் புகுந்து சூடு முஸ்லிம் இளைஞர் பலி; ஒருவர் படுகாயம்

ஏறாவூர் சதாம் ஹுசைன் கிராமப் பகுதியில் நேற்று முன்தினமிரவு முஸ்லிம் இளைஞர் ஒருவர் இனந்தெரியாதவர்களால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

இச்சம்பவத்தில் படுகாயமடைந்த மற்றுமொருவர் ஆபத்தான நிலையில் மட்டக்களப்பு போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அவசரசிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றார். இரவு 11.45 மணியளவில் வீடொன்றில்

(12ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### தவறிவிட்டது

கடந்த 27.08.2004 அன்று புளியங்குளத்திலிருந்து பரந்தன் நோக்கி வந்த பேருந்தில் கனகராயன் குளத்திற்கும் முறிகண்டிக்குமிடையில் கோகுலன் என்பவருடைய கிற்பாக் பேருந்தில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் புளியங்குளம் போக்குவரத்துக்கழக நேரக்கணிப்பாளரிடம் வழங்குமாறு கேட்டுக் கொள்கின்றேன். (சி-10333)


## இந்தியா நிதியுதவி

அண்மையில் சிறிலங்கா அரசாங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்ட குள புனரமைப்புத் திட்டத்திற்கென இந்திய அரசாங்கம் நிதியுதவி வழங்கவுள்ளது.இந்தோ-சிறிலங்கா அமைப்பினால் இந்திய உயர் ஸ்தானிகரின் மூலம் இந்நிதி வழங்கப்படுமென அமைப்பின் தலைவர் கூறியுள்ளார். மேலும் சிறிலங்காவில் இளைஞர்களுக்கு விவசாயத்துறையில் பயிற்சிகளை வழங்குவதற்கும் நிதியுதவி வழங்குவதற்கு உடன்பாடு எட்டப்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# விசர்நாய் கடித்தடுப்பு மருந்துக்கு வவு. மருத்துவமனையில் தட்டுப்பாடு

வவுனியா பொது மருத்துவமனையில் விசர்நாய் கடிக்கு பாவிக்கப்படும் ஊசி மருந்து பாரிய தட்டுப்பாடு நிலவுவதாக வவுனியா மாவட்ட பொது மருத்துவமனை வைத்திய அத்தியட்சகர் பி.சத்தியலிங்கம் தெரிவித்தார். இதற்குப் பிரதான காரணம் நாள் ஒன்றுக்கு 15 இற்கு மேற்பட்ட புதிய நோயாளர்கள் வருவதும், வெளி மாவட்டங்களில் இருந்தும் அதிகளவான நோயாளர்கள் வருவதுமே காரணம் என்றும் அவர் தெரிவித்தார். விசர்நாய் கடிக்கு பாவிக்கப்படும் ஏ.ஆர்.வி. என்ற ஊசி மருந்து நாடளாவிய ரீதியில் தட்டுபாடு நிலவுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இதே வேளை கொழும்பு மத்திய மருந்தகத்திலும் இந்த மருந்துக்குத் தட்டுபாடு நிலவுகிறது. நேற்று முன்தினம் கொழும்பில் இருந்து 75 மருந்துப் போத்தல்கள் வந்துள்ளதாகவும், எனினும் இந்த மருந்து கூடியது 150 நோயாளர்களுக்கு மட்டுமே பாவிக்கக் கூடியதாக இருக்கும் என்றும் அவா தெரிவித்தார். யாழ்ப்பாணம், குருநாகல், தம்புள்ள, கிளிநொச்சி, முல்லைத்தீவு போன்ற இடங்களில் இருந்தும் அதிகளவான நோயாளர்கள் வவுனியா பொது மருத்துவமனையில் மருந்து இருப்பதாகக் கருதிவருவதாகவும். இது மிகவும் இக்கட்டான நிலைக்கு தள்ளியுள்ளதாகவும் தெரிவித்தார். இதன் காரணமாக இருப்பில் இருக்கும் மருந்து முடிந்தால் நோயாளர்களினை வெளியில் மேற்படி மருந்து வாங்கச்சொல்ல வேண்டிய நிலை ஏற்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (21)

# மேஜர் ஈழப்பிரியா நினைவு கராத்தேப் போட்டிகள்

2004 ஆண்டுக்கான மேஜர் ஈழப்பிரியா நினைவான தமிழீழ தேசிய கராத்தேப் போட்டி செப்ரெம்பர் மாத இறுதிப்பகுதியில் கிளிநொச்சி பொதுவிளையாட்டு மைதானத்தில் நடாத்தப்படவுள்ளது. எனவே மேற்படி போட்டிகளுக்கான சுற்று நிருபம் மாவட்ட கராத்தே சங்கத்தினருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. ஆகவே இதுவரைக்கும் பதிவுகளை மேற்கொள்ளாத கராத்தே சங்கங்கள் மாவட்ட விளையாட்டுத்துறையினருடன் 05.09.2004 இற்கு முன் பதிவுகளை உறுதிப்படுத்திக்கொள்ளுமாறு தமிழீழ விளையாட்டுத் துறையினர் கேட்டுக்கொள்வதுடன்,தேசிய ரீதியில் வெற்றிபெறும் வீர, வீராங்கனைகளுக்கு சிறப்புப்பரிசில்களும், பதக்கங்களும் வழங்கப் படவுள்ளது.

# வவுனியாவில் மீட்கப்பட்ட எலும்புக்கூடு கழுத்து நெரிக்கப்பட்டு கொல்லப்பட்டவருடையது

## - றுகுணு பேராசிரியர் அறிக்கை சமர்ப்பிப்பு

(செட்டிகுளம்)

வவுனியா சிதம்பரபுரம் பகுதி மலக்குழியில் இருந்து எடுக்கப்பட்ட எழும்புக் கூடானது கழுத்து நெரிக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்டவருடையது என்று றுகுணு பல்கலைக்கழகப் பேராசிரியரால் வவுனியா நீதி மன்றுக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எடுக்கப்பட்ட எலும்புக் கூட்டுக்குரியவர் பெண் என்றும் 18-வயதுக்கும் 20 வயதுக்கும் உட்பட்டவர் என்றும், இவரின் கழுத்தில் கயிறு போட்டு நெரிக கப்பட்டதாலேயே அவர் இறந்து இருப்பதாகவும் றுகுணு பல்கலை கழகத்தின் பேராசிரியர் சந்திரசேன நெரியல் நேற்று வவுனியா மாவட்ட நீதிமன்றுக்கு சமர்ப்பித்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார். கடந்த 24 ஆம் திகதி சிதம்பரபுரம் பழைய வீட்டுத் திட்டப் பகுதியில் பாழடைந்த வீட்டின் மலக்குழியில் இருந்து எலும்புக் கூட்டுத் தொகுதி மீட்கப்பட்டு இருந்தமை குறிப்பிடத்தக்கது. கடந்த வருடம் டிசம்பர் மாதம் காணாமற் போனதாகத் தெரிவிக்கப்பட்ட 19 வயதான செல்வம் பவானி என்பவருடையது என்று தாயாரும், சகோதரியும் அடையாளம் காட்டி இருந்தனர். இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்று நம்பப்படும் இராணுவத் துணைப்படையைச் சேர்ந்த ஒருவர் உட்பட மூன்று பேர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (21)

# ஈருருளி – உந்துருளி விபத்தில் இளைஞன் ஒருவர் காயம்

பரந்தன் சந்திப் பகுதியில் ஈருருளி உந்துருளி விபத்தில் ஈருருளியில் வந்த இளைஞர் காயமடைந்தார். இச்சம்பவம் நேற்றுக் காலை 7.00 மணியளவில் இடம்பெற்றது. இதில் குமரபுரம் கால் ஏக்கர் திட்டத்தைச் சேர்ந்த ப. கிருஸ்ணராசா (வயது-19) என்பவரே காயமடைந்தவராவார். மேற்படி இளைஞர் ஈருருளியில் கிளிநொச்சி நோக்கி வந்தவேளை பரந்தன் சந்தியில் வீதியைக் குறுக்கிட முயற்சித்த சமயம் பின்னால் வந்த உந்துருளி மோதியது. உடனே ஈருருளியின் முன் சில் கழன்று ஓடியது. இதன்போது ஈருருளியில் வந்த இளைஞர் காயமடைந்தார். எனினும் உந்துருளியில் வந்தவர் நிறுத்தாமல் செல்ல முயற்சித்த சமயம்பொதுமக்கள் கூக்குரலிட்டு நிறுத்தினர். காயப்பட்ட இளைஞர் கிளி. வைத்தியசாலைக்குச் சிகிச்சைக்காக எடுத்து செல்லப் பட்டார். (14)

# அளவுக்கு அதிகமான பயணிகளை ஏற்றுவது; மிதி பலகைப் பயணத்துக்கு முற்றாகத் தடை

## - தமிழீழக் காவல்துறையினர் அறிவிப்பு

(அலுவலக செய்தியாளர்)

பேருந்தின் மிதிபலகைகளில் பயணிப்பதும், அளவுக்கு அதிகமான பயணிகளை ஏற்றுவதும் முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளது என்றும், மீறி செயற்படும் சாரதிகள் மீதும், நடத்துனர் மீதும் கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென்று கிளிநொச்சி காவல்துறையின் வீதிப்போக்குவரத்துப் பிரிவுப் பொறுப்பாளர் சி.சிவகுமாரன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் வீதிப்போக்குவரத்துப் பற்றி குறிப்பிடுகையில்: பிரதான வீதியில் விபத்துக்களை தவிர்ப்பதற்காக தம்மால் மிகவும் இறுக்கமான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட பின்னரும் பலர் அவற்றைக் கருத்தில் எடுக்காது தம்மிடம் பிடிபட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இதில் ஈருருளிகளில் சமாந்தரமாக வந்தவர்கள் 50 சோடி நபர்களும் அதேபோல் உந்துருளியில் மூன்றுபேரை ஏற்றிவந்ததாக 25 உந்துருளிகளையும் பிடித்து சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டதாக குறிப்பிட்டார்.

இதில் பகல்வேளையில் பிடிபடும் வாகனங்கள் நீதிமன் றத்தில் முற்படுத்தப்பட்டுள்ள துடன், இரவு வேளையில் பிடிபடுபவர்களுக்கு தாம் நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்தார்.

மேலும் இரவுவேளையில் வாகனங்கள் வெளிச்சமின்றி வந்தால் அவற்றை உடனடியாக மறித்து வெளிச்சம் பொருத்தப் பட்ட பின்னரே அனுப்பி வைக்கின்றோம். மேலும் வர்ண வெளிச்சம் முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார்.

அத்துடன் கிளிநொச்சி டிப்போ சந்தியிலிருந்து சேவியர் கடைச் சந்தி வரையான வாகனங்களின் வேகம் 40 கி.மீ ஆக குறைகப்பட்டுள்ளது என்பதை அனைத்து வாகன சாரதிகளுக்கும் தெரியப் படுத்துவதாகவும் இவற்றை கடைப்பிடித்து வீதி விபத்துக்களை தடுக்க ஒத்துழைக்குமாறு வீதிப்போக்குவரத்துப் பிரிவினர் வேண்டிக்கொள்கின்றனர்.(சோ,.கு)

# பம்பை மடு காட்டுப்பகுதியில் கழிவு கொட்டுவது பற்றி ஆராய்வு

வவுனியா நகர்ப் பகுதியில் கழிவுப் பொருட்களை கொட்டுவதற்கு என்று பம்பைமடு காட்டுப் பகுதியில் இடம் ஒதுக்குவது தொடர்பாக ஆராய்ந்து வருவதாக வவுனியா நகரசபை தகவல்கள் தெரிவிக்கின்றது. ஏற்கனவே இராசேந்திரம்குளம் பகுதியில் நீண்ட நாட்களாக வவுனியா நகரின் கழிவுப் பொருட்கள் கொட்டப்பட்டமையும். இதனால் தாம் பாரியளவு பாதிக்கப்படுவதாக தெரிவித்து அப்பகுதியான பாரதிபுரம், விநாயகபுரம், சூடுவந்தபுலவு போன்ற பகுதி மக்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.(21)

## -வடமராட்சி கிழக்கில் -

# வெளிச்சவீடு இன்மையால் கரையை இனங்காண்பதில் சிரமம்

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கில் கடலில் தொழில் செய்யும் பல மீனவர்கள் ஆழ்கடலுக்குச் செல்வதனால் கடும காற்று, மழையிருள் சூழ்ந்த வேளைகளில் கரையை அடைவதில் பெரும் கஷ்ரங்களை எதிர்நோக்கி வருகின்றனர் எனப் பல தொழிலாளர் தெரிவிக்கின் றனர். காரணம் என்னவெனில் வடமராட்சி கிழக்கில் ஒரு வெளிச்ச வீடு கூட இல்லை வெற்றி லைக்கேணியிலும், குடாரப்பிலும் இருகோரி (வெளிச்சம் இல்லாத கூர்மையான உயர்ந்த கட்டடம்)கள் இருக்கின்றது. இவைகள் ஆங்கிலேயர் காலத்தில் கட்டப்பட்டதாக இங்குள்ள முதியவர்கள் தெரிவிக்கின்றார்கள்.

இப்பிரதேசத்தில் ஒரு வெளிச்சவீட்டினைக் கட்டினால் வடமராட்சி கிழக்கு மக்களுக்கும் ஏனைய பிரதேசக் கடற்றொழிலாளர்களுக்கும் கரையை இனம் காண்பதற்குப் பெரும் உதவியாய் இருக்கும் என்று இப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். (11)

## -வவுனியா நகரப் பகுதியில்-

# மீன் வியாபாரிகள் அதிகரிப்பு நடவடிக்கை எடுக்க முடிவு

வவுனியா நகர்ப் பகுதியில் மாலை நேரங்களில் மீன் வியாபாரிகள் அதிகரித்திருப்ப தாகவும் இவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட இருப்பதாகவும் வவுனியா நகரசபையினர் தெரிவித்துள்ளனர். மீன் விற்பதற்கு என்று ஒதுக்கப்பட்டுள்ள இடத்தைத் தவிர்த்து நகரின் பல பகுதிகளிலும் மீனை வைத்து விற்பனை செய்வதாகவும், இதன் காரணமாக நகர வாசிகள் பலவகையான சிரமங்களுக்கும் முகம் கொடுத்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (21)

# சனாதிபதியையும், பிரதமரையும் புலிகள் அங்கீகரிக்க வேண்டும்

## –மல்வத்த பீட மகாநாயக்கர் கோரிக்கை

புலிகள்நாட்டின் சனாதிபதியையும், பிரதமரையும் அங்கீகரிக்க வேண்டுமென மல்வத்த பீடத்தின் மகாநாயக்கர் அதிசங்கைக்குரிய திப்பதுவாவே ஸ்ரீசித்தாந்த சுமங் கலதேரர் தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ்.நாகதீப விகாரையின் பிரதமசங்கநாயக்கர் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் ஜெயலத் ஜெயவர்த்தன ஆகியோரைச் சந்தித்த போது அவர் மேற் கண்டவாறு தெரிவித்துள்ளார். மல்வத்தபீடத்தின் மகாநாயக்கர் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த நாம் தயாரென கூறியிருந்தார். அவரை பாராட்டுவதற்காக இக்குழுவினர் கண்டிக்குச் சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. பேச்சுவார்த்தைக்கான நேரம், இடம் என்பவற்றை ஏற்பாடு செய்வதற்கு உதவப்போவதாக இவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதன் போது மேலும் கருத்துத் தெரிவித்த மல்வத்த பீடத்தின் மகாநாயக்கர் அனைவரையும் ஒன்றாக பிரச்சினைகளைக் கலந்துரையாடி அவற்றுக்குத் தீர்வுகாண வேண்டுமென தெரிவித்துள்ளார்.




# பன்னிரு நேபாளப் பணயக் கைதிகள் ஈராக் தீவிரவாதிகளால் படுகொலை!

## –காத்மண்டுவில் கலவரம் வெடித்தது

(காத்மண்டு)

**ஈராக் தீவிரவாதிகளால் பணயக் கைதிகளாக வைக்கப்பட்டிருந்த 12 நேபாள நாட்டவர்கள் நேற்று முன்தினம் படுகொலை செய்யப்பட்டனர். இதனையடுத்து நேபாளத்தில் நேற்றுப் பெரும் கலவரம் வெடித்தது. இந்நிலையில் தலைநகர் காத்மண்டுவில் காலவரையறையற்ற ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது.**


நேபாளத்தைச் சேர்ந்த 12 தொழிலாளர்களில் ஒருவரது தலையைத் துண்டித்த தீவிரவாதிகள் 11 பேரை தலையில் துப்பாக்கியால் சுட்டுக்கொலை செய்தனர் என்று இஸ்லாமிய இணையத்தளம் ஒன்று அறிவித்துள்ளது.

ஈராக்கில் வேலைசெய்து வந்த 12 நேபாளியர்களை ஆகஸ்ட் 20 ஆம் திகதி அல்-சுன்னா என்ற தீவிரவாதக்குழு கடத்திப் பிணையாட்களாகப் பிடித்துவைத்திருந்தது. அவர்களை வீடியோப் படம் எடுத்துக் கடந்த சனிக்கிழமை தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்டது. அதன் பிறகு அவர்களைப் பற்றிய தகவல் ஏதும் இல்லாமல் இருந்தது. இந்நிலையில் இந்த இணையத்தளம் இத் தகவலைத் தெரிவித்துள்ளது.

12 நேபாளியர்களில் ஒருவரின் கண்களைக் கட்டி அவரது தலையை முகமூடி அணிந்த ஒருவர் துண்டிக்கும் காட்சி இணையத்தளத்தில் இடம்பெற்றுள்ளது. கமராவின் பார்வைக்கு வெட்டப்பட்ட தலையைக் காட்டுகிறார் அந்தத் தீவிரவாதி. மேலும் மீதமுள்ள 11 பேரின் பின்னந் தலையில் துப்பாக்கியால் மற்றுமொரு தீவிரவாதி சுடும் காட்சியும் இடம்பெற்றுள்ளது.

இந்தக் காட்சிகளின் புகைப்படங்கள் இஸ்லாமியத் தீவிரவாதிகளின் பிற இணையத்தளங்களிலும் வெளியிடப்பட்டுள்ளன. இதற்கிடையே 12 தொழிலாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் பணிக்கு அமர்த்தியிருந்த ஜோர்தான் நிறுவனம் இச சம்பவம் குறித்து தகவல் ஏதும் கிடைக்கவில்லையெனக் கூறியுள்ளது.

ஈராக்கில் அமெரிக்கத் தலைமையிலான படைகளில் நேபாளம் இடம்பெறவில்லை. அப்படி இருந்தும் நேபாளியர்கள் பிணையாட்களாகப் பிடிக்கப்பட்டுள்ளனர்.




சுட்டுக்கொல்லப்பட்ட நிலையில்

இது இவ்வாறிருக்க ஈராக்கில் 12 நேபாளப் பிரஜைகள் கொல்லப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் நேபாளத்தில் கலகக்காரர்கள் கலவரங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் தலைநகரில் பிரதான பள்ளிவாசலை தாக்கிய போது பொலிசாரால் விரட்டியடிக்கப்பட்டுள்ளனர். இதேவேளை சவுதி அரேபிய விமான நிறுவன அலுவலகம், கட்டார் விமான சேவை அலுவலகம் ஆகிய வற்றுக்குள் பிரவேசித்து அங்குள்ள யன்னல் களை உடைத்துத் தளபாடங்கள் மற்றும் ஆவணங்களை வீதியில் போட்டு எரித்துள்ளனர். ஆயினும் ஊரடங்குச் சட்டம் அமுலுக்கு வந்ததைத் தொடர்ந்து அங்கு அமைதி நிலை ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

## 30 பேர் காயம்

இங்கிலாந்தின் வடகிழக்குப் பகுதியிலுள்ள லிங்கன் நகரில் நேற்று முன்தினம் மதவிழா நடந்து கொண்டிருந்த போது பார்வையாளர் பகுதியில் அமைக்கப்பட்டிருந்த மேடை சரிந்து. இதில் சுமார் முப்பது பேர் காயமடைந்தனர். விபத்து நடந்த போது பிரார்த்தனை நடந்து கொண்டிருந்தது.



ஈராக்கை விட்டு அமெரிக்கா வெளியேறவேண்டும் என்று கேட்பதற்காகத் தங்களுக்குள் ஆலோசனை நடத்திய (இடம் இருந்து) பிரஞ் அதிபர் ஜாக்சிராக் ரஷ்ய அதிபர் விளாதிமீர்புதின், ஜேர்மன் பிரதமர் ஜெரார்ட்டுரோடர், ரஷ்யாவின் கருங்கடல் பகுதியிலுள்ள சோச்ஷுசி என்ற கடல் வாசத்தலத்தில் இத்தலைவர்கள் நேற்றுமுன்தினம் சந்தித்தனர்.

## அமைதிப் பேச்சுக்களை அர்த்தமுள்ளதாக்க பாகிஸ்தான் புதிய பிரதமர் உறுதி!

(இஸ்லாமபாத்)

இந்தியாவுடனான அமைதி முயற்சிகளை அர்த்தமுள்ளதாக்க உறுதி பூண்டிருப்பதாகப் பாகிஸ்தான் புதிய பிரதமர் சௌகத் அஜீஸ் தெரிவித்துள்ளார்.

இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் அனுப்பிய வாழ்த்துச் செய்திக்கு அவர் நன்றி தெரிவித்து கடிதம் எழுதியுள்ளார்.

ஜம்மு காஷ்மிர் உட்பட அனைத்துப் பிரச்சினைகள் குறித்தும் நடந்து வரும் பேச்சுவார்த்தைகள் மிகவும் முக்கியமானவை என்றும் அவர் கூறியுள்ளார்.



நியூயோர்க்கில் அமெரிக்க அதிபர் புஷ்சிற்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்தியோரில் ஒருவரைக் கைது செய்கின்ற பொலிசார்.

## இரு பேருந்துகளில் தற்கொலைத் தாக்குதல் குழந்தைகள் உட்பட 15 இஸ்ரேலியர் பலி!

### -ஹமாஸ் உரிமை கோரல்

இஸ்ரேலின் தெற்குப் பகுதியில் உள்ள பீர்சேவா நகரில் நேற்று முன்தினம் பலஸ்தீனத் தீவிரவாதிகள் இரண்டு பேருந்துகள் மீது நடத்திய தற்கொலைப் படைத்தாக்குதல்களில் பேருந்துகளில் சென்றுகொண்டிருந்த பள்ளிக் குழந்தைகள் மற்றும் அவர்களது பெற்றோர்கள் என 15 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் 80 பேர் படுகாயமடைந்தனர்.

இந்தத் தாக்குதலுக்கு ஹமாஸ் தீவிரவாதிகள் பொறுப்பேற்றுள்ளனர். இந்த வருட ஆரம்பத்தில் தங்கள் இயக்கத் தலைவர்கள் இருவரை இஸ்ரேல் இராணுவத்தினர் கொன்ற தற்கு பழிவாங்கும் விதமாக இந்தத் தாக்குதலை நடத்தியதாக அறிவித்துள்ளனர். தாக்குதலுக்கு இஸ்ரேல் பிரதமர் ஏரியல் ஷரோன் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். அத்துடன் அவர் தாக்குதலுக்குக் காரணமானவர்களுக்கு எதிரான நடவடிக்கை தொடங்கும் எனவும் அறிவித்துள்ளார்.



காயமடைந்தவர்களை அம்பியுலன்ஸ் வண்டி நோக்கிக் கொண்டு வரும் முதலுதவிப் பணியாளர்கள்.

## பழமையான எரிமலைக் குளம்புப் படிமங்கள் கண்டுபிடிப்பு

ஜப்பானின் விஞ்ஞானிகள் கடலுக்கடியில் 30 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வெடித்துச் சிதறிப்போன லாவா எனும் எரிமலை குளம்பின் படிவங்களை கண்டு பிடித்துள்ளனர். ஜப்பான் அரசு ஆழ் கடல் ஆய்வு மேற்கொள்வதற்கு 1980 களில் அதிகதிறன் வாய்ந்த நீர் மூழ்கிக் கப்பலைத் தயாரிக்கும் முயற்சிகளில் ஈடுபட்டது.

இதனடிப்படையில் 10 கோடி அமெரிக்க டொலர்கள் செலவில் கடல் மட்டத்திலிருந்து 6500 மீற்றர் ஆழம் வரை மூழ்கி ஆய்வு செய்யக் கூடிய கப்பல் கட்டும் பணிகள் 1990 இல் முடிவடைந்தன. இதைத் தொடர்ந்து விஞ்ஞானிகள் உலகின் பல்வேறு கடற் பகுதிகளிலும் ஆய்வுகளை மேற்கொண்டனர். இந்த நிலையில் தென்னமெரிக்காவின் பெருநாட்டை ஒட்டியுள்ள கிழக்குப் பசுபிக்கடற் பகுதியில் கடந்த ஜூன்மாதம் ஆய்வுகளைத் தொடங்கிய போது, அங்கு கடல் மட்டத்திலிருந்து சுமார் 3400 மீற்றர் ஆழத்தில் எரிமலைக் குளம்பான லாவா பாறையாகிப்போன நிலையில் இருப்பதைக் கண்டு பிடித்துள்ளனர்.இந்த எரிமலை 30 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வெடித்துச் சிதறியுள்ளதை ஆய்வுகள் மூலம் கண்டறிந்துள்ளனர்.



அரேபியத் தொலைக்காட்சியான அல்-ஜசீராவுக்குபேட்டியளிக்கும் பிரான்சிய பணயக் கைதிகளான கிறிஸ்ரியன்செஸ்நொட், ஜோர்ஜஸ் மல்ப்ரன்ளட் ஆகியோர்.



பாக்தாத்தில் எண்ணெய் விநியோகக் குழாயில் ஏற்பட்ட தீயை அணைக்கப் போராடும் தீயணைப்புப் படையினர்.

## சூடான் டார்பூர் பிரதேசத்திலுள்ள அகதிகளின் நிலை மோசமடைகிறது!

### -பேச்சுக்களும் சுமுகமாக இடம்பெறவில்லை

சூடானின் டார்பூர் பிரதேசத்திலுள்ள அகதிகளின் நிலை மிகவும் மோசமடைந்து வருவதாக ஐக்கிய நாடுகளின் முகவர் நிலையங்கள் தெரிவிக்கின்றன.

இப்பிரதேசத்திலிருந்து பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு சூடான் அரசாங்கமும், கிளர்ச்சியாளர்களும் நடத்திவரும் பேச்சுவார்த்தைகள் சுமுகமாக இடம்பெறவில்லையென்று தெரியவருகின்றது. இதன் காரணமாக அகதிகளுக்கு பாதுகாப்பளிக்க சூடான் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று ஐக்கியநாடுகள் பாதுகாப்புச் சபை காலக்கெடுவை விதித்திருந்தது. எனினும் குறிப்பிட்ட திகதி நிர்ணயம் தற்பொழுது காலாவதியாகி விட்டது.

கடந்த ஆண்டு ஆரம்பமாகிய இந்த மோதல்கள் காரணமாக சுமார் 50ஆயிரம் பேர் உயிரிழந்திருப்பதாகவும், 10 இலட்சத்திற்கும் அதிகமானோர் இடம் பெயர்ந்திருப்பதாகவும் ஐக்கிய நாடுகள் மதிப்பீடு ஒன்று தெரிவித்துள்ளது. இங்குள்ள அகதிகள் பல நோய்களினை எதிர்நோக்கி வருகின்றனர். இதனால் இங்கு சுகாதாரம் என்பன மிகவும் மோசமடைந்து காணப்படுவதுடன் மஞ்சட் காமாலை நோயினாலே இவர்கள் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர்.

## வடக்கு நோக்கி நகர்வு

(டோக்கியோ)


ஜப்பானில் புயலுடன் கூடிய மழை ஜப்பானில் தென்மேற்குப் பகுதியிலிருந்து வடக்குப் பகுதியை நோக்கி நகர்ந்து வருகின்றது. கடந்த இரண்டு நாட்களாக தென்மேற்குப் பகுதியில் வீசிய புயல் மற்றும் மழை காரணமாக இதுவரை ஏழு பேர் உயிரிழந்துள்ளனர். பசுபிக் கடலின் வடமேற்குப் பகுதியில் ஆண்டு தோறும் கோடை, இலையுதிர் காலங்களில் சூறாவளிக் காற்று வீசுவது வழமை.

# நீரின்றி அவதிக்குள்ளாகிவரும் தருமபுரம் மேற்கு கிராம மக்கள்

(அலுவலக செய்தியாளர்)

**தற்போது ஏற்பட்டுள்ள கடும் வரட்சி காரணமாக தருமபுரம் மேற்கு கிராமமக்கள் நீரின்றிப் பெரும் அவலநிலையை எதிர்நோக்கியுள்ளனர்.**

தருமபுரம் மேற்குப் பகுதி வரட்சி காரணமாக மிகவும் பாதிப்புற்றுக் காணப்படுவதோடு குடி நீருக்கு மட்டுமின்றி நீருக்கே பெரும்தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. தேவைகளுக்கு நீரைப் பெறமுடியாதுள்ளனர். மேலும் 200 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசிக்கும் இக் கிராமத்தில் ஓரிரு பொதுக்கிணறுகள் மட்டுமே



படம் பிரதீபன்-சசி

இதன் காரணமாக அப்பகுதி மக்கள் குளங்களில் இருந்த சிறிய கிடங்குகளில் காணப்படும் நீரையே குடிப்பதற்கும் பயன்படுத்தி வருகின்றனர். இதன் காரணமாக பலர் நோய் வாய்பபட்டும் உள்ளனர். மேலும்குட்டைகளிலிருந்த நீர் கூட இப்போது வற்றிப்போயுள்ளதால் அப்பகுதி மக்கள் பெரிதும் அவலநிலையை எதிர் நோக்கியுள்ளனர். அத்தோடு அப்பகுதியில் நிலத்தடி நீர் மிகவும் ஆழத்திலேயே காணப்படுவதால் கிணறுகளை அமைக்க பெருந் தொகையான நிதி தேவைப்படும். அந்தளவிற்கு வசதியற்ற காரணத்தால் தொடர்ந்தும் இவர்கள் நீர்ப்பிரச்சினையை எதிர்நோக்கி வருகின்றனர். இங்கு காணப்படுகின்ற ஓரிருபொதுக் கிணறுகளிலே குடிநீரை மட்டும் பெற்று வரும் மக்கள் ஏனைய காணப்படும் இந் நிலையில் அவற்றிலும் நீர்வற்றிவருகின்றது.

தமது நிலை குறித்து கடிதங்களை அந்தக் கிராமத்தின் கிராம மட்ட அமைப்புக்கள் மேலிடங்களுக்கு பலதடவைகள் அனுப்பியதோடு நேரிலும் கூறியுள்ளனர். உடன் நடவடிக்கை எடுப்பதாகக் கூறிய மேலதிகாரிகள் பின்னர் அதுபற்றி கவனயீனமாக இருப்பது குறித்தும் தாம் கவலையடைந்துள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை பல அரசுசாரா நிறுவனங்கள் தமதுகடிதங்களுக்கு எதுவிதபதிலும் தராதுள்ள தாகவும் தெரிவிக்கின்றனர். மேலும் முன்னர் இப்பகுதிக்கு குடிநீர் வழங்கவென அமைக்கப்பட்ட நீர்த் தாங்கியும் இராணுவச்செல்வீச்சிற்கு இலக்காகி முற்றாகஅழிந்துள்ளது. இதேவேளை இப்பகுதிக்கு பல அரச,அரசசார்பற்ற நிறுவனங்கள் உதவிகளை வழங்க வென முன்வந்து தரவுகளைத் திரட்டிவிட்டு பின்னர் எதுவித நடவடிக்கைகளும் எடுப்பதாகத் தெரியவில்லையென கூறும் அப்பகுதி மக்கள்,உதவி வழங்கவென அப்பகுதிக்கு வரும் நிறுவனங்களை தற்போது வெறுப்புடனேயே நோக்கும் நிலை உருவாகியுள்ளது. மேலும் 2003ஆம் ஆண்டு நியாப் திட்டத்தினரின் புனரமைப்புச் செயற்பாட்டிற்காக இக்கிராமம் தெரிவானது. இதனடிப்படையில் தரவுகள் திரட்டப்பட்டு தேவைப்பகுப்பாய்வுகளும், பல ஒன்று கூடல்களும் நடத்தப்பட்டதனால் அப்பகுதிப் பொது அமைப்புக்கள் பல ஆயிரக் கணக்கான பணத்தையும் செலவு செய்தனர். ஆனால் நியாப் நிறுவனத்தினர் எது விதசெயற்பாடுகளையும் மேற்கொள்ளாது விலகிச்சென்றனர்.இதனால் பல எதிர்பார்ப்புடனிருந்த மக்கள் பெருத்த ஏமாற் றத்தைச் சந்தித்த அதேவேளை பெரும்விசனமடைந்து முள்ளனர்.

இதேவேளைகோடை காலத்தில் கடும் வரட்சியையும், மாரிகாலத்தில் பெரும் வெள்ளப் பெருக்கையும் சந்தித்துவரும் இப்பகுதிக்கு வீதிப்புனரமைப்புக்களை செய்வதற்குக் கூட எந்தவொரு நிறுவனங்களோ, திணைக்களங்களோ முன்வராததால் மாரி காலத்தில் வீதிகள் அனைத்திலும் நீர் பெருக்கெடுத்துப் பாய்வதால் மக்கள் போக்குவரத்திலும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். இது போன்று எதுவித அடிப்படைகளும் இல்லாத நிலையில் துன்பமடைந்து வரும் இப்பகுதி மக்களுக்கு எந்தவகையிலாவது உதவிகிடைக்காதா என்ற ஏக்கத்துடனேயே அப்பகுதி மக்கள்வாழ் கின்றனர். (பி,ச)

## பற் சிகிச்சை

(பூநகரி)

பூநகரி கட்டம் I வைத்தியசாலையில் ஒவ்வொரு செவ்வாய் , வியாழக்கிழமைகளிலும் பற்சிகிச்சை நடைபெறும் என வைத்தியசாலை நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர். (34)

## இளைஞர் யுவதிகளுக்கு விசேட தொழிற்பயிற்சி

### -வூஸ் நிறுவனம் ஏற்பாடு

வடக்கு-கிழக்கு மாகாணம் உட்பட நாட்டின் சகலபகுதிகளிலும் உள்ள யுவதிகளுக்கு பாரம் பரியமற்ற தொழிற் பயிற்சிகளை வழங்கும் விசேட திட்டமொன்றினை உலக கனேடிய பல்கலைக் கழக நிறுவனம் வூஸ் அமுல் செய்துள்ளது. பெண்களை மரபு ரீதியற்ற தொழில்முறைகளில் ஈடு படுத்தி பொருளாதாரத் துறையில் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதே இத்திட்டத்தின்நோக்கமென இந் நிறுவனத்தின் கிழக்குப்பிராந்திய நிகழ்ச்சித்திட்டஅதிகாரி எஸ்.ஜேசு சகாயம் தெரிவித்தார்.

இலங்கையின் மொத்த சனத் தொகையில் 52 சதவீதமானோர் பெண்களாவர். இந்நிலையில் மனிதவளத்தை உரியமுறையில் பயன்படுத்துவதன் மூலம் நாடு பொருளாதாரத் துறையில் முன்னேற்றம் அடையும் என்று அவர் கூறினார். கல்விப் பயிற்சியூடாக புனரமைத்தல் என்ற விசேட திட்டத்தின் கீழ் 5நாள் வதிவிடப்பயிற்சி கல்முனை கிறிஸ்தா இல்லத்தில் அக்கரைப்பற்றுப் பெண்கள் அமைப்பு, திருகோணமலை காந்தி சேவா பெண்கள் அமைப்பு ஆகிய பங்காளர் நிறுவனங்களின் அனுசரணையில் நடைபெற்றது. இதில் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களைச் சேர்ந்த பல யுவதிகள் பங்குபற்றினர். பங்காளி அமைப்புகளைப் பலப்படுத்துவதன் மூலமாக பெண்களை சமூகரீதியில் வலுப்படுத்தும் இவ்வேலைத் திட்டத்தில் 6 மற்றும் 12 மாதங்களுக்கான பயிற்சிகளுக்கென வறிய, இடம்பெயர்ந்த மற்றும் தடுப்பு முகாம்களிலிருந்து விடுதலையானவர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர். WUSC நிறுவனத்தின் இவ் விசேட பயிற்சித்திட்டத்தின் மூலம் இதுவரை சுமார் 7 ஆயிரம் பேர் பயிற்றப்பட்டுள்ளனர். அக்கரைப் பற்று பாதிக்கப்பட்ட பெண்கள் அரங்கம், திருகோணமலை காந்தி சேவா பெண்கள் அமைப்பு ஆகிய பங்காளர் நிறுவனங்களின் அனுசரணையில் இப் பயிற்சி வகுப்பு நடைபெற்றது.

## புலிகளுடன் இணையச் சென்ற சிறுவன் பெற்றோரிடம் ஒப்படைப்பு

அம்பாறை மாவட்டத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளுடன் இணையச் சென்ற அம்பாறை சென்றல் காம்பைச் சேர்ந்த 15 வயதான தியாகராஜா அசோதரன் என்ற சிறுவனே தமிழீழ விடுதலைப்புலிகளால் கொக்கட்டிச் சோலையில் வைத்து பெற்றோர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை அம்பாறை மாவட்டத்தில் அக்கறைப்பற்று முதல் கோரைக்கல்மடு வரையுள்ள கடல் பிரதேசத்தில் கடல் மண் அகழ்வதற்கு தமிழீழவிடுதலைப்புலிகள் நேற்று முன்தினம் முதல் தடை விதித்துள்ளனர்.

தம்பிலுவில் மகாவித்தியாலயத்தில் இடம் பெற்ற உழவு இயந்திர உரிமையாளர்களின் சங்கக் கூட்டத்திலேயே உடும்பன் கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் உடும்பன் இது குறித்து அறிவித்துள்ளார்.

## சென்ஜோன்ஸ் அம்பியுலன்ஸ் படைப்பிரிவின் 2ஆம் கட்ட சமூகநலப் பயிற்சி நெறி

சென்ஜேன்ஸ் அம்பியுலன்ஸ் படைப்பிரி வினரால் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து சுகாதார திணைக்களத்தினூடாக ஏ.எஸ்.பி.நிறுவனத்தின் நிதி உதவியுடன் நடாத்தப்படும் சமூகநலப் பயிற்சி நெறியின் முதற்கட்டம் பாடசாலை ஆசிரியர்களுக்கு 2004 ஆனி மாதத்தில் நடாத்தப் பட்டது.அதன் தொடர்ச்சியாக 2ஆம் கட்ட சமூகநலப்பயிற்சி நெறி பாடசாலை மட்டத்தில் மாணவர்களுக்கு நடாத்தும் அடிப்படையில் கடந்தவாரம்கிளி/நாகேஸ்வர வித்தியாலயத்திலும் கிளி/கண்டாவளைமகா வித்தியாலயத்திலும் நடாத்தப் பெற்றது.

இப்பயிற்சி நெறியில் கல வெட்டித்திடல் கிளி/நாகேஸ்வர வித்தியாலயத்தில் 40இற்கும் மேற்பட்ட மாணவர்களும், கண்டாவளை மகாவித்தியாலயத்தில் 30 இற்கு மேற்பட்ட மாணவர்களும் ஆசிரியர்கள், அதிபர்களும் கலந்துகொண்டனர். மேலும் இப்பயிற்சிநெறியில் முதலுதவி, உடல் அமைப்புத் தொழிற்பாடு, முதலுதவிச் செய்முறைகள், தொற்று நோய்கள்,சுகாதார நடைமுறைகள் தொடர்பாக பல விரிவுரைகள் சென்ஜோன்ஸ் அம்பியுலன்ஸ் படைப்பிரிவு ஆணையாளர், திட்ட இணைப்பாளர்,தலைவர், தொண்டர்கள், ஆகியோராலும் சுகாதாரத்திணைக்களப் பிரதிநிதிகளாலும் வழங்கப்பட்டன. இப்பயிற்சிநெறியில் முதலுதவி தொடர்பான கைந்நூல் சென்ஜோன்ஸ் அம்பியுலன்ஸ் படைப் பிரிவினரால் தயாரிக்கப்பட்டு பயிற்சியில் பங்குபற்றிய ஒவ்வொரு அதிபர்,ஆசிரியர்கள், மாணவர்களுக்கும் வழங்கப் பட்டது.மேலும் பயிற்சியை நிறைவு செய்த பாடசாலைக்கு முதலுதவிப் பெட்டியும், அதற்கான மருந்துகள்,உபகரணங்களும் சென்ஜோன்ஸ் அம்பியுலன்ஸ் படைப் பிரிவினரால் இத்திட்டத்தில் வழங்கப்பட்டதோடு,ஒவ்வொரு பாடசாலையிலும் பயிற்சிநெறியை நிறைவுசெய்த மாணவர்களிடையே பாடசாலை மட்டத்தில் முதலுதவிக் குழுக்கள் அமைக்கப் பட்டதோடு, பயிற்சியின் நிறைவில் பரீட்சையும், சான்றிதழ்,சின்னங்கள் வழங்கும் ஒழுங்கும் சென் ஜோன்ஸ் அம்பியுலன்ஸ் படைப் பிரிவினரால் செய்யப்பட்டுள்ளது.

## இரணைமடுக்குளத்தில் நீர் வற்றியது பயிர்கள் நாசம், விவசாயிகள் பாதிப்பு

(வட்டக்கச்சி)

இரணைமடுக்குளத்தில் நீர் வற்றியதால் பயிர் நிலங்கள் எரிந்து வருகின்றன.

கிளிநொச்சியின் தாய்க்குளமானதும்34 அடி நீர்த்தேக்கஅளவைக் கொண்டதுமான இரணைமடுக குளத்தில் தற்போதைய கடும் வரட்சியினால் போதிய நீர் இன்மையாலேயே பயிர்நிலங்கள் எரிந்துவருகின்றன. இரணைமடுக்குளத்தின் கீழுள்ள ஏனைய குளங்களும் நீர் வற்றிப்போயுள் ளன.

வட்டக்கச்சிப் பிரதேசத்திற்கு நீர் வழங்கும் வலதுகரை வாய்க்காலும், கிளிநொச்சிப்பகுதிக்கு நீர் வழங்கும் இடதுகரை வாய்க்காலும் இக் குளத்திற்கு உள்ளன.

இவற்றில் வலதுகரை வாய்க்கால் நீரின்றி அறவே வற்றியுள்ளது. அண்மையில் இவ் வாய்க்கால் டோசர், உழவு இயந்திரம் என்பவற்றுடனும் பொதுமக்களின் உதவியுடனும் சேறுஅள்ளப்பட்டு, குளத்தில் நீருள்ள இடத்தில் இருந்து வட்டக்கச்சி கால்வாய்வரை செப்பனிடப்பட்டதை அடுத்து ஓரிருவாரங்களுக்கு சொற்ப நீர் பாய்ந்தது.

இதனால் ஒரு சில விவசாயிகள் நன்மை அடைந்தனர். குறிப்பிட்ட சில வாரத்தின்பின் விதைப்பினை மேற்கொண்ட விவசாயிகள் பெரும் நட்டத்தை எதிர்நோக்கியுள்ளனர்.

அத்துடன் நெல் ஆயிரத்து இருநூறு ரூபாவிற்கு விற்கப்படும் போதும் அறுவடைக்குப் போதிய ஆட்கள் இல்லாமையாலும், நோய்ப் பீடைகளின் தாக்கம்அதிகரித்திருப்பதாலும் விவசாயிகள் பெரும் அவலத்தைச் சந்தித்துவருகின்றனர்.

இடதுகரை வாய்க்கால் ஊடாக தற்போது சொற்ப அளவு நீர் வெளியேறிவருகின்றது. ஆயினும் வட்டக்கச்சிப் பிரதேசத்தின் இராமநாதபுரம், புதியசிவிக்சென்ரர், வலம்புரிநிலையம், மாயவனூர், கல்மடுநகர், சம்புக்குளம், கட்சன்வீதி ஆகிய பகுதிகளில் மக்கள் பெரும் குடி நீர்ப்பற்றாக் குறையை எதிர்நோக்கி வருகின்றனர்.

அத்துடன் வட்டக்கச்சிப் பிரதேசத்தில் ஐம்பது ஏக்கருக்கும் மேற்பட்ட பயிர் நிலங்கள் எரிந்தும் ஏனையவை எரியும் அபாயநிலையிலும் உள்ளன.

போதிய அளவு விவசாய உள்ளீடுகள், பசளைகள், மருந்துகள் என்பன தேவைக்கேற்ப கிடைத்த மகிழ்ச்சியில் விவசாயிகள் திறமையாக விவசாயம் செய்தபோதிலும் நீர் போதியளவு இல்லாதமையால் விவசாயிகள் கவலையுற்றுள்ளனர்.

நீண்டகால இடைவெளிக்குப் பின் இரணைமடுக் குளம் நீர் வற்றியிருப்பது குறிப்பிடத்தக்கது. (12)

# தமிழரையும் இணைத்துச் செயற்படும் ஞானம் ஜே.வி.பிக்கு எப்பொழுது பிறக்கும்

விக்ரமபாகு
கருணாரட்ண
(லக்பிம)
**தமிழில் சக்திவேல்**

“ஏமது அரசாங்கத்திற்கு திறந்த பொருளாதாரக் கொள்கை உண்டு. இதனால் நெல் உற்பத்தி செய்யும் எமது நாட்டில் விவசாயிகளை ஊக்குவிக்காமல் நாம் வெளிநாட்டிலிருந்து அரிசியை இறக்குமதி செய்கிறோம். பால் உற்பத்தியாளரை ஊக்குவிக்காமல் பால் மாவை வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்கிறோம். சீனி உற்பத்தியை இங்கு செய்ய முடியும். அதையும் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்கிறோம். எமது நாடு கடலால் சூழப்பட்டு சகல மீன்வளங்களும் நிறைந்துள்ளது. மீனவர்களை ஊக்குவித்து அவர்களுக்கு நிவாரணம் வழங்காமல் தகரத்தில் அடைக்கப்பட்ட பலவகை மீன்களையும், கருவாடு, நெத்தலி போன்றவற்றையும் நாம் இறக்குமதி செய்கிறோம்” என்று தற்போதைய நிதியமைச்சர் நாட்டு மக்களுக்குப் பொதுத்தேர்தல் காலங்களில் கூறினார்.ஆனால் இவர்கள் 1994 ஆம் அண்டு தொடக்கம் 2001 ஆம் ஆண்டுவரை நாட்டில் ஆட்சி நடத்தி நாட்டைக் குட்டிச்சுவராக்கவில்லையா? திறந்த பொருளாதாரக் கொள்கை எனக்கூறி நாட்டின் சொத்துக்களைக் கொள்ளை அடிக்கவில்லையா? இவை யாவும் சந்திரிகாவின் ஆட்சியிலும் நடந்தன.

இப்போது நிதியமைச்சர் அமுனுகமவுக்கு ஜே.வி.பியின் அதிரடி நடவடிக்கைகளினால் சுடலை ஞானம் பிறந்துள்ளது. யாருடைய தூண்டுதலாக இருந்தாலும் ஒருநாட்டின் நிதியமைச்சரின் பங்கு நாட்டின் பொருளாதாரத்திற்கு மிகவும் அவசியம். இவற்றை கூறும் பொழுது பழைய சுதந்திரக்கட்சி ஆட்சியின் நினைவு நம் மனக் கண்முன் நிற்கிறது. அக்காலத்தில் நாட்டின் பொருளாதார அபிவிருத்தியை முன்னெடுத்துச் செல்வதற்கு மிகவும் கஷ்ரப்பட்டனர். மீன்பிடி, பால் உற்பத்தி, சீனி உற்பத்தி, எண்ணெய் உற்பத்தி, அப்பிள் உற்பத்தி இவையாவற்றையும் இந்த நாட்டில் மேற்கொண்டு படுதோல்வியைத் தழுவிக்கொண்டனர். அப்போதைய நிதியமைச்சர் என்.எம் பெரேரா இத்திட்டத்தினைக் கொண்டுவந்தார். இவை யாவற்றையும் அன்றைய இடதுசாரிக்கட்சிகள் இந்த நாட்டுக்குக் கொண்டுவந்தனர்.அன்று சிறிமாவோ பண்டாரநாயக்க செல்வந்தர்களுக்கு அடிமையாகி லங்கா சமாசக்கட்சி, இலங்கை கம்யூனிஸ்ட்கட்சி என்பவற்றை வெளியேற்றினார். தொழிலாள வர்க்கத்தை நசுக்கினார். அவர்களின் திட்டத்தை அன்று அமுல் படுத்தியிருந்தால் இன்று இந்த நாடு பொருளாதாரத்தில் பின் தள்ளப்பட்டிருக்காது. சிறிமாவோ பண்டாரநாயக்க நாட்டின் செல்வந்தர்களுக்கு அடிமையாகி இந்தத்திட்டத்தினை நிறைவேற்றவில்லை. இத்திட்டங்கள் யாவும் தவிடுபொடியாகிய வேளையில் ஜே.ஆர். ஜெயவர்த்தன ஆட்சிப் பொறுப்பினை ஏற்றார்.

அவர் ஒரு சர்வாதிகாரி முழு அதிகாரத்தையும் தன்னிடம் வைத்துக்கொண்டு திறந்த பொருளாதாரக் கொள்ளையென வெளிநாட்டவர்களுக்கு தேசிய சொத்துக்களை ஈடுவைத்தார். இதையே இன்று சந்திரிகாவும் செய்து கொண்டு வருகிறார். நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதி முறை இன்று நாட்டுக்குப் பெரும் சாபக்கேடாகவுள்ளது. சந்திரிகாவுக்கு உலக நெருக்கடிகள் அதிகரித்து வருகின்றமையால் அவர் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் இருந்து பின்வாங்க முடியாது. இந்த நாட்டின் தலைவி என்ற முறையில் நாட்டைப் பாதுகாக்க வேண்டுமானால் நாட்டின் பொருளாதார வளர்ச்சியை கட்டியெழுப்ப வேண்டும் அதற்குத் தேசிய ஒற்றுமை மிக அவசியம் வடகிழக்கு யுத்தத்தை வைத்துக்கொண்டு எதுவும் அவரால் செய்யமுடியாது. தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை அவர்களுக்குக் கொடுக்காமல் சந்திரிகாவினால் தேசிய ஒற்றுமையையும், பொருளாதார வளர்ச்சியையும் கட்டியெழுப்ப முடியாது. இந்த யுத்தத்தினால் வெளிநாட்டு ஏகாதிபத்தியத்திற்கு இப்போது நாம் அடிமையாகியுள்ளோம். சர்வதேச ரீதியில் எமது நாடு முன்னேறவேண்டுமானால் தமிழ் மக்களையும், விடுதலைக்காகப் போராடும் விடுதலைப்புலிகளையும் இணைத்துக்கொள்ள வேண்டும். ஆனால் இவை எல்லாவற்றையும் செய்வதற்கு ஜே.வி.பியினருக்கு எப்போது ஞானம் பிறக்கும் என்பதை நிதியமைச்சர் அமுனுகம எங்களுக்குத் தெரிவிக்க வேண்டும்.

தேசிய பொருளாதார வளர்ச்சிக்கு கிராமிய மக்களின் பங்களிப்பு இல்லாமல் அரசாங்கத்திற்கு எதனையும் செய்யமுடியாது. கிராமிய சிறுகைத்தொழில்களை ஊக்குவிக்க வேண்டும். பத்தாயிரம் குளங்களைத் திருத்தப் போகிறோம் என்று தற்பொழுது பெருமெடுப்பிலான பிரச்சாரத்தை அரசாங்கம் மேற்கொள்கிறது. ஆனால் இவர்களுக்கு நூறு குளங்களையாவது உருப்படியாகத் திருத்த முடியும் என நாங்கள் நம்பமாட்டோம். நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு தொழிலாளர்களை இணைத்துக்கொள்ள வேண்டும் பழைய இடதுசாரிகளையும், ஜே.வி.பியினரையும் இணைத்துக்கொண்டு தொழிலாளர் வர்க்கத்தை நாய்ச்சங்கிலி கொண்டு கட்டிப்போடமுடியும் என நினைத்தால் இவரைப்போல் புத்தியற்றவர் இந்த நாட்டில் இல்லை. மலைநாட்டு தோட்டத்தொழிலாளர்கள் தொடக்கம் கொழும்புத் துறைமுகம் வரையும் அரச கூட்டுத்தாபனங்கள் தனியார் துறையினர்கள் வரை நாடு தொழிலாளவர்க்கத்தின் பிடியில் உள்ளது. இவர்கள் எல்லோரும் இப்போது அரசாங்கத்தின் எதிரிகளாக மாறிக்கொண்டு வருகிறார்கள். ஏழைமக்களின் பிள்ளைகள் கால்நடையாகப் பாடசாலைகளுக்குப் படிப்பதற்காகச் செல்கின்றனர். நாட்டில் எண்ணெய் விலைகள் அதிகரித்தாலும் பணக்காரரின் பிள்ளைகள் இன்றும் சுகபோக வாகனங்களில் செல்கின்றனர். இது குறைய வில்லை. வறிய மக்கள் கைகளை நாவினால் நக்கிக்கொண்டு இருக்கிறார்கள். ஆனால் செல்வந்தரோ கிடைப்பதை அப்படியே விழுங்கி ஏப்பம்விடுகின்றனர். எங்களுக்கு எடுப்பதற்கு டொலர் நோட்டுக்கள் இல்லை. ஆனால் சுப்பர் மார்க்கெட் எல்லாவற்றிலும் வெளிநாட்டு டொலர் பொருட்கள் குவிந்து கிடக்கின்றன. அவர்களின் பிள்ளைகள் வெளிநாட்டிலிருந்து டொலர்களை விழுங்கிய வண்ணம் உள்ளனர். எமது வைத்தியசாலைகளில் மருந்து இல்லாவிட்டாலும் அப்பலோ வைத்தியசாலையில் சிகிச்சை பெறுவதற்குத் தேவையான டொலர் நோட்டுக்கள் இருக்கின்றன. ஆகவே இங்கிருந்து எமது தாய்மார்கள் சகோதர சகோதரிகள் வெளிநாட்டவர்களின் வீடுகளில் கூலிகளாக வேலைசெய்து இங்கு அனுப்பும் பணத்தை சுறாமீன்கள் போல் சாப்பிடுபவர்களுக்கு ஒன்றுமே தெரியாது.

இப்போது தொழிலாளா வர்க்கத்தினர்கள் இவர்கள் நடிக்கும் நாடகங்கள் எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டு குழப்பமடைந்த குழுமாடுகள் போல் இருக்கின்றனர். இவைகளை எல்லாம் கணித முறைப்படி அமுனுகம அவர்கள் எழுத்துவடிவமாக மக்களுக்குக் காட்டிக்கொண்டு இருக்கின்றார். இந்த எழுத்து வடிவங்கள் பாமர ஏழை மக்களுக்குத் தெரியாது. நிதியமைச்சர் அவர்களே இந்த ஏழை மக்கள் புரிந்துகொள்ளும் படி உருப்படியானதைச் செய்யுங்கள். உங்களின் கணித முறையை இங்கு ஏற்றுக்கொள்வதற்கு எவருமே இல்லை.அதை நீங்களே படியுங்கள். சந்திரிகாவும் 1994ஆம் ஆண்டு தொடக்கம் 2001ஆம் ஆண்டு வரை இந்தச் சவாரியைச் செய்தார். ஒரு வித்தியாசம் என்னவென்றால் சந்திரிகா கள்ளத்தனமாக எல்லா நாடுகளுக்கும் சவாரி செய்தவண்ணம் இருந்தார். ஆனால் ரணில் விக்கிரம சிங்க மக்கள் எல்லோரும் பார்க்கும் படியாக ஓடினார். ஆகவே இவற்றுக்கெல்லாம் நிதியமைச்சர் வகை சொல்லியாகவேண்டும். புதிய பிரயாணத்தை ஆரம்பிப்பதற்கு முன்னதாக தொழிலாள வர்க்கத்தின் பங்குகளை அவர்களுக்கு முறையாகக் கொடுங்கள். தொழிலாள வர்க்கத்தினர் எச்சில் இலைகளை நக்கும்பொழுது காட்போட் பயில்வானாக மாறுவதற்கு முயற்சிசெய்ய வேண்டாமென நிதியமைச்சர் சரத் அமுனுகமவைக் கேட்டுக் கொள்கிறேன்.

---

-இந்தியாவிலிருந்து திரும்பி மீளக் குடியேறிய-

## 500 குடும்பங்களுக்கு மன்னாரில் இதுவரை மீளக்குடியமர்வுக் கொடுப்பனவு வழங்கப்படவில்லை

(மன்னார்)

அண்மைக்காலமாக இந்தியாவிலிருந்து வந்து தலைமன்னார் பேசாலை எழுத்தூர், எமில்நகர், பள்ளிமுனை , தாழ்வுப்பாடு, சாவற்கட்டு போன்ற கிராமங்களில் மீளக்குடியமர்ந்த 500 குடும்பங்களுக்கு மீள்குடியமர்வுக் கொடுப்பானவாக 25 ஆயிரம் ரூபா இன்னும் வழங்கப்படவில்லை.

ஏறத்தாழ ஆறுமாதங்கள் கடந்தும் இக்கொடுப்பனவு வழங்கபடாமையால் மக்கள் தமது பொருளாதார வளத்தை வளம்படுத்தமுடியாது திண்டாடுகின்றனர். இதனை உரிய அதிகாரிகளுக்குத் தெரிவித்த போது நிதி வழங்கப்படாமை காரணமாகவே தாமதம் எனக் கூறினர்

## மீன்பிடிப் பயிற்சிக் கல்லூரி மன்னாரில் நிறுவ ஏற்பாடு

(மன்னார்)

மன்னாரில் மீன்பிடிப் பயிற்சிக் கல்லூரி ஒன்றை அமைப்பதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

மன்னார் மாவட்ட கடற்றொழில் உதவிப் பணிப்பாளர் இவ் ஏற்பாடுகளைச் செய்துவருகிறார்.

அநேகமாக வங்காலை அல்லது பேசாலைக் கிராமத்தில் மீன்பிடிக் கல்லூரி அமைய ஏற்பாடாகியுள்ளது.இதனால் மன்னாரிலுள்ள மீனவர்கள் நவீன முறைப்படி மீன்களைப் பிடிப்பதற்கும், நவீன தொழில்நுட்பங்களைக் கற்றுக் கொள்வதற்கும் உதவியாக இருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது. (மி)

## மாத இறுதி வியாழக்கிழமை மிருகக்காட்சிச்சாலையை மூடமுடிவு

(கொழும்பு)

வருகின்ற செப்ரெம்பர் மாதம் முதல் ஒவ்வொருமாத இறுதி வியாழக் கிழமைகளிலும் தெகிவளை மிருகக் காட்சிச் சாலையை மூடுவதற்கு தேசிய விலங்கியல் பூங்கா தீர்மானித்துள்ளது. மிருகக் காட்சிச் சாலை மாதத்தில் ஒரு தடவை இதைப் பேணும் நோக்கத்திற்காக மூடப்பட்டிருக்கும் என தேசிய விலங்கியற் பூங்காக்களின் பணிப்பாளர் பிரிகேடியர் எச்.ஏ.என்.ரி. பெரேரா கூறினார்.

தற்பொழுது கிழமை முடிவு நாட்களில் 7000இற்கு மேற்பட்டவர்கள் வருகை தருவதாகவும், சில வேளைகளில் இவ்வெண்ணிக்கை 10000 வரை அதிகரிப்பதாகவும் குறிப்பிட்ட அவர் அண்மைய பாடசாலை விடுமுறையில் 15000 இற்கு மேற் பட்டவர்கள் இம் மிருகக் காட்சிச் சாலைக்கு வருகை தந்ததாகவும் கடந்த ஞாயிற்றுக்கிழமை மட்டும் 24000 பாடசாலை மாணவர்கள் வருகை தந்ததாகவும், இவ் வதிகரித்த எண்ணிக்கையானவர்களால் மிருகங்கள் அழுத்தத்திற்குட்படுவதாகவும் அவற்றிற்கு ஒரு ஓய்வு நாள் தேவை எனவும் மேலும் கூறினார்.

## யாழ். நாகவிகாரைக்கு மேலும் காணியைப் பெற தலைமைப் பிக்கு அமைச்சரூடாக நடவடிக்கை

(கொழும்பு)

யாழ்ப்பாணம் 'நாகதீப' விகாரைக்கென பல காணிகளை வழங்குவதற்கான நடவடிக்கைகளை சிறிலங்காவின் விவசாய, கால்நடைஅபிவிருத்தி, காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு மேற்கொண்டு வருவதாகத் தெரிய வருகின்றது.

இவ் விகாரையின் தலைமைப்பிக்குவான நவடகல பதுமகித்திதேரர் விகாரையுடன் இணைத்துக்கொள்வதற்கு பல காணிகள் தேவையென விடுத்த வேண்டுகோளுக்கு அமையவே இந்நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் கூறப்படுகின்றது.

போதி மண்டபம், யாத்திரிகர் விடுதி என்பன அமைந்திருக்கும் காணிகள் விகாரைக்குச் சொந்தமானவை அல்ல என தலைமைப் பிக்கு அறிவித்ததன் காரணமாக குறித்த காணிகளை துரிதமாக விகாரைக்கே சொந்தமானதாக மாற்றுமாறு அதிகாரிகள் உத்தரவிட்டுள்ளனர்.

இதன் மூலம் சில காலமாக நின்றுபோயுள்ள விகாரையின் புனருத்தாரண மற்றும் அபிவிருத்திப் பணிகளை முன்கொண்டு செல்லமுடியும் என பதுமகித்தி தேரர் தெரிவித்திருப்பதாக 'டெய்லி நியூஸ்' நாளிதழ் செய்தியொன்று கூறுகின்றது.

## எப்போதும் இல்லாதவாறு மன்னாரில் கடும் வரட்சி

(மன்னார்)

மன்னாரில் எப்போதும் இல்லாதவாறு வரட்சி நிலை நிலவுகின்றது.

குடிநீர் பெறும் கிணறுகள் யாவிலும் நீர் வற்றியுள்ளது. இதனால் மன்னாரில் குடிநீரிற்குத் தட்டுப்பாடு நிலவிவருகிறது.

இதேவேளை மன்னார் கட்டுக்கரைக் குளத்தை அண்மித்து வாழும் மிருகங்கள் வரட்சியினால் நீரைப் பெற முடியாமல் பிரதான வீதியைக் கடந்து மக்களின் குடியிருப்பை நோக்கி செல்லும் காட்சியை முருங்கன் பகுதியில் காணமுடிகிறது (மி)

# விவசாயக் கண்காட்சியில்...




































HAYLEYS AGRO
LISTER PETTER



# இலங்கை ஒரு தேசமாக ஒருபோதும் இருந்ததில்லை

## சட்டத்துறை விரிவுரையாளர் வி.ரி.தமிழ்மாறன்

**இலங்கை முழுவதும் ஒரு தேசமாக ஒருபோதும் இருந்ததில்லை என்பதை இப்போது சிங்கள ஆய்வாளர்களே ஒப்புக்கொள்ளத் தொடங்கியுள்ளதாகக் கொழும்பு பல்கலைக்கழக சட்டத்துறை சிரேஷ்ர விரிவுரையாளர் வி.ரி.தமிழ்மாறன் தெரிவித்துள்ளர்**

கொழும்பு தமிழ் சங்கத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளரும், நாட்டுப் பற்றாளருமான ஜி.நடேசனின் நினைவஞ்சலிக் கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றும் போதே, விரிவுரையாளர் தமிழ்மாறன் இவ்வாறு அங்கு கருத்து வெளியிட்டார். இலங்கை ஒரு தேசமாக இருக்கக்கூடிய எல்லா வாய்ப்புக் களும் தவறவிடப்பட்டுவிட்டதாக தனதுரையில் குறிப்பிட்ட வி.ரி.தமிழ் மாறன், இலங்கை ஒரு தேசமாக இருக்க முடியாமல் போனமைக்கு என்ன காரணம் என்பதற்கு நடேசனுடைய வாழ்க்கையே ஒரு உதாரணமாக அமைந்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார். கொழும்பு பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்ற காலத்தில் நடேசன் இலங் கைத் தேசியத்தை வலியுறுத்தி வந்த ஒருவர் என்பதை கூட்டத்தில் நினைவு கூர்ந்த தமிழ்மாறன், பின்னர் நடேசனுக்கு நேர்ந்த கதியும், அவ்வாறு நேர்வதற்கான பின்னணிக் காரணிகளுமே இலங்கை ஏன் ஒரு தேசமாக இருக்கமுடியாமல் போனது என்பதற்கான சிறந்த உதாரணம் என்று அங்கு குறிப்பிட்டார். தமிழ்ச் சங்க சங்கரப்பிள்ளை மண்ட பத்தில் மாலை ஆறுமணிக்கு இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் உபதலைவர் ராஜ்குமாரின் தலைமையில் ஆரம்பமான நினைவஞ்சலிக் கூட்டத்தில், சக ஊடகவியலாள ரான நிக்சன், முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவர் அமீன் மற்றும் புதிய இடதுசாரி முன்னணியைச் சேர்ந்த திருநாவுக்கரசு ஆகியோரும் உரையாற்றியிருந் தனர். நடேசனின் பாரியார், அவரது இளைய புதல்வர் உட்பட மற்றும் பல ஊடகவியலாளர்களும், அன்பர்களும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டிருந்தனர்.

# ஜப்பார் கொலை முயற்சிக்கு அன்வர் இஸ்மாயில் கண்டனம்

தேசிய முஸ்லிம் காங்கிரஸின் பாராளுமன்ற உறுப்பினரும், கிழக்கு உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சின் ஊடக அதிகாரிகளில் ஒருவரும், பத்திரிகையாளருமான அப்துல் ஜப்பார் சமீமை கொலை செய்ய எடுத்த முயற்சியை வன்மையாகக் கண்டித்து தேசிய முஸ்லிம் காங்கிரஸின் தவிசாளரும், கிழக்கு உட்கட்டமைப்பு அபிவிருத்தி பிரதி அமைச்சருமான எம்.ஐ.அன்வர் இஸ்மாயில் அறிக்கை ஒன்றினை விடுத்துள்ளார்.

தேசிய முஸ்லிம் காங்கிரஸின் உச்சபீட உறுப்பினரும் எமது அமைச்சின் ஊடக அதிகாரியும், செய்தியாளருமான சமீமை கொலை செய்ய எடுத்த முயற்சி எங்களது கட்சியின் வேலைத் திட்டங்களை முடக்கி விட எடுத்த திட்டமிட்ட நடவடிக்கையாகும். இக்கொலை முயற்சியில் ஈடுபட்டவர்க்ள் முஸ்லிம் காங்கிரஸின் கைக் கூலிகளே தவிர வேறு யாருமாக இருக்க முடியாது. ஆயுதக் கலாசாரத்தில் நம்பிக்கை வைக்காமல் தேசிய அரசியல் நீரோட்டத்தில் சங்கமித்து மக்களின் வாக்குப் பலத்தினால் முஸ்லிம்களின் உரிமைகளை வென்றெடுக்க தலைவர் உருவாக்கிய முஸ்லிம் காங்கிரஸ் இவ்வாறு செய்வது மறைந்த தலைவர் அஷ்ரப்புக்கு செய்யும் வரலாற்றுத் துரோகமாகும். தயவுசெய்து இவ்வாறான செயல்களில் ஈடுபடுவதை கைவிடுமாறு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசை வினயமாக கேட்டுக் கொள்கின்றேன் என அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

# நோர்வே சமாதான ஏற்பாட்டாளருக்கெதிராக சர்வதேச நீதி மன்றத்தில் வழக்கு!

சிறிலங்காவின் இனப்பிரச் சனைக்குத் தீர்வுகாண மத்தியஸ் தத்திலும் சமரச முயற்சிகளிலும் தொடர்ந்து ஈடுபட்டுவரும் நோர் வேப் பிரதிநிதிகளுக்கெதிராக, அவுஸ்திரேலியாவிலிருந்து இயங்கும் "சிறிலங்கா மனித உரிமைகள் அமைப்பு" என்ற ஒரு நிறுவனம், சர்வதேச நீதிமன்றத்தில் வழக்குப் பதிவுசெய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நோர்வே பிரதம மந்திரி, வெளிநாட்டு மந்திரி, விசேட பிரதி நிதி எரிக் சூல்ஹெய்ம், தமிழீழ தேசியத் தலைவர் வே.பிரபாகரன் ஆகியோர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டு மேற் கொள்ளப் பட்டுள்ள இவ்வழக்கில், இவர்கள் சர்வதேச அரங்கில் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவும் உதவியும் வழங்கினார்கள் என்று இவர்கள் மேல் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

# சந்திரசேகரன் எம்.பி இன்று வன்னி விஜயம்

மலையக மக்கள் முன்னணித் தலைவரும், நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான பெ.சந்திரசேகரன் இன்று வியாழக்கிழமை வன்னிக்கு விஜயம் செய்யவுள்ளார்.

இவர் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வனை சந்தித்து தற்பொழுது ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி நிலை குறித்து கலந்துரையாட வுள்ளார். தமிழீழ விடுதலைப் புலிகளுடன் கலந்துரையாடுவதற்கு விருப்பம் தெரிவித்துள்ள கண்டி மல்வத்தை மகாநாயக்க தேரரை புலிகள் சந்திப்பதற்கான திகதியும் இந்த சந்திப்பின்போது நிர்ணயிக் கப்படும் என்று தெரியவருகின்றது.

# நீதிமன்றமும் பொலிஸ் ஆணைக்குழுவும் சுதந்திரமாக செயற்பட வேண்டும்

## -ஐ.தே.கட்சி பிரதித்தலைவர் கருஜெயசூரிய

(கொழும்பு)

நீதிமன்றமும் பொலிஸ் ஆணைக்குழுவும் சுதந்திரமாகச் செயற்பட வேண்டும் இதன் மூலமே நாட்டிற்கும் சமூகத்திற்கும் சிறந்த முறையில் பணியாற்ற முடியும் என ஐ.தே.க வின் பிரதித் தலைவர் கருஜெய சூரிய தெரிவித துள்ளார்.

கொழும்பில் எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோக பூர்வ வாசஸ்தலத்தில் நேற்று முன் தினம் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சட்டமும் ஒழுங்கும் சீர்குலைவ தென்பது சமூகத்தை அதிர்ச்சிக் குள்ளாக்கும் விடயமாகும். ஒவ் வொரு மணித்தியாலத்திற்கும் ஒரு கொலைச்சம்பவம் நடைபெறு கின்றது. இந்த நாட்டில் 35ஆயிரம் சட்டவிரோத ஆயுதங்கள் இருப் பதாகப் பதில் பாதுகாப்பு அமைச் சர் தெரிவித்திருக்கிறார். இது நாங்கள் எவ்வளவு பயங்கரமான சூழலில் இருக்கின்றோம் என் பதைப் புரிந்து கொள்வதற்குப் போதுமானதாகும். என அவர் மேலும் கூறினார்.

# அ.அட்டைக்கு பிழையான தகவல்களை வழங்குவது குற்றமாகக் கருதப்படும்

## பொலிஸ் அத்தியட்சகர்

(கொழும்பு)

தேசிய அடையாள அட்டை பெறுவதற்கான பிழையான சான்றி தழ்களை கிராம சேவையாளர்கள் வழங்குவது குற்றவியல் நடவடிக் கையாகும் என கொழும்பு குற்றப் பிரிவுப் பணிப்பாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான சரத் லுகொட தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் கொழும்பு கச்சேரியில் மாவட்ட கிராம சேவை யாளர்களுக்கென நடைபெற்ற கூட்டமொன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்

கிராம சேவையாளர்களின் முக்கிய கடமை நாட்டைப் பாது காப்பது எனவும் தெரிவித்துள்ள அவர் அடையாள அட்டை கோரி விண்ணப்பம் சமர்பிக்கும் ஒரு நபர் குறித்து சந்தேகம் எழுந்தால் உடனடியாக பொலிசாருக்கு அறிவிக்குமாறும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஒரு கிராம சேவையாளர் குற்றச் செயல்கள் அதிகரிப்பதைக் கட்டுப்படுத்துவதில் பொலிசாருக்கு உதவி புரியக் கடமைப்பட்டவராவார்

இதே போன்று பொதுமக்களும் இத்தகைய கடப்பாட்டினைக் கொண் டுள்ளனர் எனவும் சரத் லுகொட மேலும் தெரிவித்ததாக "டெய்லி நியூஸ்" செய்தி வெளியிட்டுள்ளது.

# பொலிஸ் ஜீப் மோதியதில் வெல்லவாயவில் இளைஞன் பலி

(கொழும்பு)

பொலிசாரின் ஜீப்வண்டி மோதி யதில் பயணிகள் பேருந்து நடத் துனர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கடந்த திங்கட்கிழமை சிறிலங காவின் எதிலிவேவ-வெல்ல வாயவில் இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

தனியார் பேருந்து ஒன்றின் நடத்துனரான லால் (வயது-18) என்ற குறித்த இளைஞன் வீதி யைக் கடக்க முற்பட்டபோது அதி வேகமாக வந்த ஜீப் வண்டி இவரை மோதிக் கொன்றது.

ஜீப்பின் சாரதி வெல்லவாய பொலிசாரால் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட பின்னர் விளக்கமறியலில் வைக் கப்பட்டுள்ளார்.

# ஆயிரம் தொழிற்சாலைகள்

(கொழும்பு)

நாடு முழுவதும் 1000 சிறு கிராமிய கைத்தொழில் தொழிற் சாலைகளை அமைக்கவுள்ளதாக சிறுகைத் தொழில் அமைச்சர் லால்காந்த தெரிவித்துள்ளார்.

## – தேசியக் கல்வியியற் கல்லூரிகளில் பயிற்சி பெற்ற –

# தமிழ்மொழி மூல ஆசிரியர்களை சொந்த மாவட்டங்களில் நியமிக்கப் பணிப்பு

இம் முறை தேசிய கல்வியற் கல்லூரிகளில் பயிற்சியைப் பூர்த்தி செய்து வெளியேறி வெளி மாவட்டங்களுக்கு நியமிக்கப்பட்ட தமிழ் மொழி மூல ஆசிரியர்களை உடனடியாக அவர்களது சொந்த மாவட்டங்களுக்கு நியமிக்க நடிவடிக்கை எடுக்குமாறு சனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்க சகல மாகாண ஆளுநர்களுக்கும் பணிப்புரை விடுத்துள்ளார்.

தேசிய கல்வியற் கல்லூரி களில் பயிற்சி முடித்து இம்முறை வெளியான தமிழ்மொழி மூல ஆசிரியர்கள் சீரான நடை முறையின்றி வெளிமாவட்டங் களுக்கு நியமிக்கப்பட்டதை இலங் கைத் தமிழர் ஆசிரியர் சங்கமும், அரசியல் தலைவர்களும் கண்டித் திருந்தனர். இம்முறை இடம்பெற்ற நியமனத்தில் முறைகேடு குளறுபடி நிலவுவதால் இந் நியமனத்தை ரத்துச்செய்து அவரவர் சொந்த மாவட்டங்களுக்கு நியமிக்குமாறு தமிழர் ஆசிரியர் சங்கச் செயலாளர் த. மகாசிவம் சனாதி பதியைக் கேட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# உச்ச நீதி மன்றத்தின் தீர்ப்பு ஹக்கீமிற்கு விழுந்த அடியே

## சாடுகிறது அஷ்ரப்சமூக சேவைகள் நிறுவனம்

பாராளுமன்ற உறுப்பினர்களான றிஸாத் பதுறுத்தீன், நஜீப் ஏ.மஜித், உஷைன் பைலா ஆகியோருக்கு சாதகமாகக்கிடைத்த உச்ச நீதிமன்றின் தீர்ப்பு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ஹக்கீமின் தான்தோன்றித்தனமான நடவடிக்கைகளுக்கு பலத்த பதிலடியாகும் எனத் தெரிவிக்கும் அறிக்கை ஒன்றினை கல்முனையைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கும் தென்கிழக்கு அஷ்ரப் சமூக சேவைகள் நிறுவனம் விடுத்துள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்படுவதாவது; குர் ஆன், ஹதீஸ், இஸ்லாமிய சட்டம் என்பவற்றினை அடிப்படையாகக் கொண்டு மசூரா அடிப்படையில் வழி நடத்தப்படவேண்டிய சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸை தான்தோன்றித்தனமான நிகழ்ச்சி நிரலோடு சர்வாதிகாரமாக நடாத்தி வந்த ரவூப் ஹக்கீம் சென்ற 24ஆம் திகதி உச்ச நீதிமன்றின் தீர்வின் மூலம் தலை குனிந்திருக்கின்றார். இத்தீர்வின் பின்னராவது ஹக்கீம் தனது சுயநலப் போக்கினை மாற்றியமைத்துக் கொண்டு எடுத்ததற்கெல்லாம் கட்சியின் மூத்த உறுப்பினர்களை இடைநிறுத்தும் படலத்தைக் கைவிட வேண்டும். கட்சி என்பது ஒரு தனிநபரின் சொத்தல்ல; அது போராளிகளின் கண்ணீரும், இரத்தத்துளிகளும் சேர்ந்த ஒரு-விடுதலை விருட்சமாகும் எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

# காலாவதியான கைத்தொழிற் பொருட்களை நாட்டிற்குள் கொண்டு வருவதைத் தடுக்க சட்டம்

அபிவிருத்தியடைந்த நாடுகள் தமது கைத்தொழிற் கருவிகளை இலங்கையில் குவிப்பதைத் தடுப் பதற்கான சட்டம் ஒன்றை அறிமுகப படுத்துவதற்கான நடவடிக்கை களை அரசாங்கம் எடுத்திருப்பதாக மத்திய சுற்றாடல் அதிகார சபையின தலைவர் திலக்ரணவிராஜ தெரி வித்துள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்

"சுற்றாடல் இயற்கை வளங்கள் அமைச்சின் உதவியுடன் மத்திய சுற்றாடல் அதிகாரசபை இந்த நோக்கத்திற்கான சட்டமொன்றை வரைவதற்கு நடவடிக்கை எடுத் துள்ளது.


காலாவதியானதும் தீமை விளைவிக்கக் கூடியதுமான இயந்திர சாதனங்களை நாட்டிற் குள் கொண்டு வருவதைத் தடுக்க சபை ஏற்கனவே சட்டங்களை முறைப்படுத்தியுள்ளது" என்று தெரிவித்த ரணவிராஜ "காலா வதியான கணினிகள் குளிரூட் டிகள் போன்ற தொழிற்சாலை உப கரணங்கள் இலவசமாக அல்லது குறைந்த விலையில் தாராளமாக நாட்டினுள் வந்து சேருகின்றன" என்றும் கூறியுள்ளார்.

# இலங்கை, பாகிஸ்தான் கடல் எல்லையில் கண்காணிப்புகள் நடவடிக்கைகள் தீவிரம்

## கடலோரக் காவற்படை இயக்குனர் தகவல்

**இலங்கை மற்றும் பாகிஸ்தான் கடல் எல்லைப் பகுதிகளில் கண்காணிப்புத் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது என இந்தியக்கடலோரக் காவற்படையின் தலைமை இயக்குநர் வைஸ் அட்மிரல் அருண்குமார்சிங் தெரிவித்துள்ளார்.**

சென்னையிலிருந்து சுமார் 18 கிலோ மீற்றர் தூரத்தில் பின் செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது,



நடுக்கடலில் கடலோரக்காவற் படைவீரர்கள் செவ்வாய்க்கிழமை நிகழ்த்திய சகாசங்களை சாரங் கப்பலில் இருந்து பார்வையிட்ட

தமிழகம்-இலங்கைக் கடற் பகுதியில் தீவிரவாதம் மீண்டும் தலைதூக்காமல்தடுக்கும் வகையில் கண்காணிப்புத் தீவிரப் படுத்தப்பட்டுள்ளது. இதேபோல் குஜராத் மகாராஷ்டிர மாநிலங்களின் கடலோரப்பகுதிகளிலும் பாகிஸ்தானுடனான கடல் எல்லைப்பகுதயிலும் தீவிரவாத நடவடிக்கைகளை முறியடிக்கவும் கடலோரக் காவற்படை தீவிரமாக ஈடுபட்டுள்ளது. இந்திய-பாகிஸ்தான் கடலோரக் காவற் படைகளுக்கிடையே ஹாட்லைன் தொடர்பு வசதியை ஏற்படுத்தவும் அரசு பரிசீலிக்கின்றது என்றார்.

## -குற்றவாளிகளை ஒப்படைக்கும்-

# ஒப்பந்தத்தில் கையெழுத்திட பாகிஸ்தான் அரசு மறுப்பு

(புதுடில்லி)

குற்றங்களைச் செய்துவிட்டு தப்பிவிடும் குற்றவாளிகள் சிக்கினால் பரஸ்பரம் ஒப்படைக்க உடன்பாடு செய்து கொள்ளலாம் என்று இந்தியா தெரிவித்த யோசனையைப் பாகிஸ்தான் ஏற்க மறுத்துவிட்டது.

மன்மோகன்சிங் தலைமையில் புதிய கூட்டணி அரசு பதவியேற்ற பிறகு பாகிஸ்தான் உட்துறைச் செயலர் தாரிக் முகமது தலைமையிலான குழுவுடன் இந்திய உட்துறை செயலர் தீரேந்திரசிங் தலைமையிலான குழு ஓகஸ்ட் 11,12 ஆகிய திகதி களில் இஸ்லாமாபாத்தில் பேசியது. குற்றவாளிகளை ஒப்படைக்கும் ஒப்பந்தம் செய்துகொள்ளலாம என்று தீரேந்திரசிங் யோசனை தெரிவித்த போது அதற்கான காலம் இன்னும கனியவில்லை என்று தாரிஅகமது கூறி விட்டார்.

மும்பை நகரில் தாதாவாகச் செயற்பட்ட தாவுத்இப்ராகிம், கனிஸ்காவிமானத்தை காந்தகருக்கு கடத்திச்சென்ற பயங்கரவாதிகள், 1993ஆம் ஆண்டு மும்பைநகரில் தொடர்குண்டு வெடிப்பு மூலம் ஏராளமானோரைக் கொன்றவர்கள் என்று மொத்தம் 25 பேர் பாகிஸ்தானில் வசிப்பதாக இந்தியத் தரப்பில் தொடர்ந்து கூறப்படுகின்றது. இந் நிலையில் பாகிஸ்தானின் இந்த மறுப்பு முக்கியத்துவம் பெறுகின்றது.

# பொடோவை மீளப்பெறக்கூடாது குஜராத் முதல்வரும் வலியுறுத்து

(சென்னை)

பொடோ சட்டத்தை மத்திய அரசு திரும்பப் பெறக் கூடாது என்ற முதல்வர் ஜெயலலிதாவின் கருத்துக்கு குஜராத் முதல்வர் நரேந்திரமோடி ஆதரவு தெரிவித்துள்ளார்.

பொடோ சட்டத்தை மத்திய அரசு திரும்பப் பெற முடிவுசெய்துள்ளது. இதற்கு தமிழக முதல்வர் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளார். இது தொடர்பாக பொடோ சட்டத்தின் அவசியத்தை வலியுறுத்தி அனைத்து மாநில முதல்வர்களுக்கும் ஓகஸ்ட் 24 ஆம் திகதி கடிதம் எழுதினார்.

இதற்கு பதிலளித்து கடிதம் எழுதியுள்ள குஜராஜ் முதல்வர் நரேந்திர மோடி பொடோசட்டம் குறித்து தாங்கள் எழுதிய கடிதத்தில் இச்சட்டம் மீளப்பெறப்பட்டால் நேரிடும் ஆபத்துக்களை நன்கு அலசி ஆராய்ந்து குறிப்பிட்டுள்ளீர்கள். இச் சட்டத்தை திரும்பப் பெறுவதால் ஏற்படும் மோசமான விளைவுகள் குறித்து மத்திய அரசிற்கு கடிதம் எழுதுவேன் என்று குறிப்பிட்டுள்ளார்.

# உமாபாரதி மீதான வழக்கை மீளப்பெற பா.ஜ.க போராட்டம்

(பெங்களூர்)

மத்திய பிரதேச முன்னாள் முதல்வர் உமாபாரதி மீதான வழக்குகளை மீளப்பெறக் கோரி பெங்களூரில் முன்னாள் துணைப்பிரதமர் எல்.கே.அத்வானி தலைமையில் நேற்று திட்டமிட்டபடி போராட்டம் ஆரம்பமாகியது. பெங்களூர் ரவுண்கோல் முன்பகுதியில் செப்ரெம்பர் 07ஆம் திகதி வரை சத்தியாக்கிரகப் போராட்டம் நடைபெறும். 08 ஆம திகதி நடைபெறும் ஊர்வலத்தில் முன்னாள் பிரதமர் வாஜ்பாய் பேசுவார் என்றும் வழக்குகள் மீளப் பெறப்படும் வரை போராட்டம் தொடரும். எங்கள் போராட்டத்தில் எந்த மாற்றமும் இல்லை. திட்டமிட்டபடி கட்சியின் தேசியத் தலைவர்கள் போராட்டத்தில் பங்கேற்பர் என்றும் கர்நாடக மாநில பா.ஜ.க.தலைமையில் ஆனந்தக் குமார் தெரிவித்தார்.

# இந்தியப் பிணைக்கைதிகள் மூவருக்கும் ஆபத்தில்லை

## வெளியுறவு அமைச்சு கூறுகிறது

(புதுடில்லி)

ஈராக்கில் பிணைக்கைதிகளாக இருக்கும் மூன்று இந்தியர்களும் பாதுகாப்பாகவும் நலமாகவும் இருப்பதாக மத்திய அரசு கூறியுள்ளது. அவர்களை விரைவில் மீட்க தீவிரமுயற்சிகள் செய்யப்பட்டு வருகிறது என வெளியுறவுத் துறை அமைச்சகச் செய்தித் தொடர்பாளர் நவதேஜ் சர்ணா நேற்று முன்தினம் கூறினார்.

இதனிடையே ஈராக்கில் 12 நேபாளப் பிணைக்கைதிகள் கொலை செய்யப்பட்டமை இந்தியப் பிணைக்கைதிகள் அந்தர் ஜாமே, திலக்ராஜ் ஆகியோரின் குடும்பத்தினருக்கு கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இந்தியப் பிணைக்கைதிகள் ஆபத்தில்லாமல் திரும்பவேண்டுமென்று அவர்கள் பிரார்த்தனை செய்து வருகிறார்கள்.

அந்தர்ஜாமின் தந்தை இராம் மூர்த்தி கூறியதாவது

நேபாளப் பிணைக்கைதிகள் கொலைசெய்யப்பட்டது அதிர்ச்சியாகவுள்ளது. ஆனாலும் எனது மகன் விடுதலை செய்யப்படுவதற்கு இது தடையாக இருக்காது. இந்திய அரசு எடுக்கும் நடவடிக்கைகளில் எங்களுக்கு முழு நம்பிக்கை இருக்கிறது. பிணைக்கைதிகள் வேலைபார்த்த குவைத் நிறுவனம் மேற்கொள்ளும் முயற்சிகள் பயனளிக்கும் என்றார்.

# தமிழக சட்டப் பேரவைக்கு வருகை தரமுன் குடியரசுத் தலைவரை ஆலோசிக்க வலியுறுத்து

(சென்னை)

தமிழக சட்டப்பேரவையில் உரையாற்ற வரும்முன் அ.தி.மு.க அளித்துள்ள புகார் பற்றி இரு தரப்பிலும் தீர விசாரித்துவிட்டு வாருங்கள் என்று குடியரசுத் தலைவர் அப்துல் கலாமுக்கு தி.மு.க.தலைவர் கருணாநிதி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தமிழகச் சட்டப்பேரவைக்கு வந்து பேசவேண்டும் என்று பேரவைத்தலைவர் காளிமுத்து குடியரசுத்தலைவர் அப்துல் கலாமிடம் நேரில் அழைப்பு விடுத்திருக்கிறார். அவரும் ஒப்புக் கொண்டதாக பத்திரிகையாளரிடம் தெரிவித்துள்ளார்.

குடியரசுத்தலைவர் பேச்சு முழுவதும் பேரவையின் நடவடிக்கைக் குறிப்புக்களில் ஏறுமா என்ற உறுதிமொழியை முதலில் பெற்றுக்கொள்ள வேண்டியது அவசியமானதொன்று.

குடியரசுத்தலைவர் வருவதற்கு முன்பு அவரது பார்வைக்கு மரியாதையுடன் சில சந்தேகங்களுக்கான விளக்கம் பெற வேண்டிய வினாக்கள் உள்ளன.

மாட்சியமை தங்கிய வரே! தாங்கள் வந்து பேசப்போகும் தமிழக சட்டப் பேரவை இந்த ஆண்டு முழுவதும் 15 நாட்கள் தான் நடைபெற்றது என்பதை அறிவீர்களா? பாராளுமன்றத் தேர்தல் முடிவு மே 13அன்று அறிவிக்கப் பட்ட பிறகும் ஏற்கனவே அறிவிக்கப்பட்டு விவாதிக்கப்படாமல் இருந்த வரவுசெலவுத் திட்டம் மீதான விவாதத்தை விரைவில் தொடங்க வேண்டுமென்று எதிர்க் கட்சிகள் விடுத்த வேண்டுகோளை ஏற்காமல யூலை கடைசிவாரம் வரை அந்த விவாதத்திற்காக பேரவை கூட்டப் படவில்லை யென்பதை அறிவீர்களா? எனக்கேட்டுள்ளார்.

## பரஸ்பரம் விடுதலை

நல்லெண்ண அடிப்படையில் மொத்தம் 55 கைதிகளை இந்தியாவும் பாகிஸ்தானும் பரஸ்பரம் விடுவித்துள்ளன.

எல்லைப் பகுதியான வாகாவில் இந் நிகழ்ச்சி நேற்று முன்தினம் நடைபெற்றது.இரு நாட்டு வெளியுறவு அமைச்சர்களும் பேச்சுவார்த்தை நடத்தவுள்ள சூழலில் இந்நிகழ்ச்சி நடைபெற்றுள்ளது.



36 இந்தியர்களை விடுவித்தது பாகிஸ்தான். இவர்கள் மூன்று ஆண்டுகளிலிருந்து15 ஆண்டுகள் வரை பாகிஸ்தான் சிறைகளில் அடைக்கப்பட்டிருந்தனர். இவா களை இந்திய எல்லைப் பாதுகாப்புப் படை வசம் ஒப்படைத்துள்ளது பாகிஸ்தான்.

பதிலுக்கு 19 பாகிஸ்தானியக் கைதிகளை இந்தியா விடுவித்துள்ளது. இவர்களில் 6 பேர் குழந்தைகள், மூவர் பெண்கள்.

# உலகப் புகழ்பெற்ற விண்வெளி விஞ்ஞானிகள் பத்துப் பேரில் இந்தியர் ஒருவருக்கும் இடம்

உலகப்புகழ்பெற்ற 10 விண்வெளி விஞ்ஞானிகள் பட்டியலில் இந்திய விண்வெளி ஆய்வு மையம (இஸ்ரோ) முன்னாள் தலைவர் யு.ஆர்.ராவும் இடம் பெற்றுள்ளார். அமெரிக்காவில் இருந்து வெளிவரும் 'ஸ்பேஸ் நியூஸ்' மிகச் சிறந்த விண்வெளி ஆய்வுப் பத்திரிகை.

கடந்த மாதம் 23ஆம் திகதி வெளியான இப்பத்திரிகை இதழில் உலகப் புகழ்பெற்ற விண்வெளி விஞ்ஞானிகள் 10 பேர் பற்றிய கட்டுரை வெளியாகியுள்ளது. இந்திய விண்வெளி ஆய்வு மையத்தின் (இஸ்ரோ) முன்னாள் தலைவர் யு.ஆர்.ராவும் இந்த பட்டியலில் இடம் பெற்றுள்ளார். இதுவரை ராவ் செய்துள்ள ஆய்வுப் பணிகள் குறித்து அதில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

இந்தியாவில் விண்வெளி ஆய்வை கட்டமைத்ததில் ராவுக்குப் பெரும் பங்கு உண்டு. தகவல் தொழில்நுட்ப செயற்கைக்கோள்களை வடிவமைத்ததிலும், ஏராளமான செயற்கைக்கோள்கள் விணணில் செலுத்தப்பட்டதிலும் ராவ் முக்கிய பங்காற்றியுள்ளார். தகவல் தொழில்நுட்பம் மட்டுமன்றி, கல்வி, ஆய்வு போன்ற பல அம்சங்களுக்காகவும் இப்போது இந்தியா செயற்கைக்கோள்களைச் செலுத்தி வருகிறது. ராவ் செய்த இந்தச் சாதனை காரணமாகவே கடந்த 1999ஆம் ஆண்டு யுனிஸ்பேஸ் 3 ஐ.நா.,மாநாட்டின் தலைவராக அவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவரது செயற்பாடு காரணமாக 'இஸ்ரோ' இன்று உலகச் சிறப்பு மிக்க விண்வெளி ஆய்வு நிறுவனங்களில் ஒன்றாகத் திகழ்கிறது. இவ்வாறு 'ஸ்பேஸ்நியூஸ்' பத்திரிகையில் கூறப்பட்டுள்ளது.



காஷ்மீரில் நேற்று முன்தினம் குண்டு வெடிப்பில் காயமடைந்த ஒருவரை சிறிநகர் வைத்திய சாலைக்குக் கொண்டு செல்லும் பிரதேச வாசிகள்.

## வெளிநாடு செல்வதாக வெளிவந்த செய்திக்கு மறுப்புத் தெரிவிக்கின்றார் சீன வீராங்கனை



ஒலிம்பிக்கில் தடை தாண்டல் ஓட்டப்போட்டியில் தங்கம் வென்ற சீனாவின் லியுசியாங் மேலதிக பயிற்சிக்காக வெளிநாடு செல்வதாக வெளிவந்த செய்திக்கு முற்றுப்புள்ளி வைத்தார்.

கேள்வி ஒன்றுக்குப் பதில் அளிக்கையில் அமெரிக்கா செல்வது என்ற பேச்சுக்கிடமில்லை என்றும் தொடர்ந்தும் தனது பயிற்றுவிப்பாளரிடமே பயிற்சி எடுக்கவிருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

எதென்ஸ் ஒலிம்பிக்கில் பங்கேற்றபின் நாடு திரும்பிய அவரை பூரண இராணுவ மரியாதையுடன் வரவேற்றனர். அதன் போதே அவர் மேற்படி தெரிவித்தார்.

## பாகிஸ்தான் சுழற்பந்து வீச்சாளர் முஷ்ரக்கிற்கு மீண்டும் சத்திர சிகிச்சை

பாகிஸ்தானின் சுழற்பந்து வீச்சாளர் ஷேக்லைன் முஷ்ரக் இரண்டாவது தடவையாகவும் முழங்காலில் சத்திரசிகிச்சை செய்து கொள்ள இருக்கின்றார்.

இதையடுத்து இவர் பல மாதங்கள் ஓய்வில் இருக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

28 வயதுடைய முஷ்ரக் இந்த ஆண்டின் ஆரம்பத்தில் தனது இடது முழங்காலில் சத்திர சிகிச்சை செய்து கொண்டார். வரும் ஒக்ரோபரில் வலது முழங்காலில் சத்திர சிகிச்சை செய்துகொள்ளவுள்ள இவர் ஆறு மாதங்களுக்கு தனது செயற்பாடுகளை நிறுத்தி ஓய்வில் இருப்பார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

"ஒழுங்காகவும், நிரந்தரமாகவும் எனக்குரிய சிகிச்சையைப் பெறாவிட்டால் எனது கிரிக்கெட் வாழ்க்கை சடுதியான முடிவைச் சந்திக்கும்" என முஷ்ரக் ரொய்ட்டருக்குத் தெரிவித்துள்ளார்.

## நட்வெஸ்ட் ஒரு நாள் போட்டித்தொடர்

# ஹார்மிஷன், வார்ப் அபார பந்து வீச்சு இங்கிலாந்துக்கு 7 விக்கெட் வெற்றி



இங்கிலாந்து இந்திய அணிகளுக்கிடையில் நடைபெற்றுவரும் நட்வெஸ்ட் ஒரு நாள் போட்டித் தொடரின் முதலாவது போட்டியில் இங்கிலாந்து அணி 7 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றுள்ளது.

. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணி இந்திய அணியை துடுப்பெடுத்தாடுமாறு பணித்தது.

இதன்படி ஆட்டத்தை ஆரம்பித்த இந்திய அணி 43.5 ஓவரில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து. 170 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக்கொண்டது. துடுப்பாட்டத்தில் முகமட் ஹைவ் 50 ஓட்டங்களை 79 பந்துகளை எதிர்கொண்டு 4 நான்கு ஓட்டங்கள் அடங்கலாகப் பெற்றுக் கொண்டார்.




இதைத் தவிர ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் வீரேந்தர் ஷேவாக் 4, கங்குலி 24, லக்ஸ்மன் 29, ராகுல் ராவிட் 13, யுவராஜ்சிங் ரண் அவுட் முறையில் 4, ரொகான் கவாஸ்கர் 20, இர்பான் பதான் 3 ஓட்டங்களை முறையே பெற்று ஆட்டமிழந்தனர்.

அனில் கும்ளே ஆட்டமிழக்காது 9 ஓட்டங்களைப் பெற்றார்.

நெய்ஹரா, பாலாஜி ஆகியோர் ஓட்டமெதுவும் பெறாமல் ஆட்டமிழந்தனர்.

### ஹார்மிஷன் ஹட்ரிக் சாதனை

ஹார்மிஷன் அடுத்தடுத்து மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றி ஹட்ரிக் சாதனை படைத்தார். இந்திய அணிக்கு ஒரேயொரு பலமாக இந்தப் போட்டியில் இருந்த ஹைப்பின் விக்கெட்டை அவர் 50 ஓட்டங்கள் பெற்றபோது வீழ்த்திய பின்னர் அடுத்தடுத்து பாலாஜி மற்றும் நெய்ஹ்ரா ஆகியோரின் விக்கெட்டுக்களை கைப்பற்றி சாதனைக் குரியவரானார்.



பந்து வீச்சில் ஹார்மிஷன் 41 ஓட்டங்களுக்கு மூன்று விக்கெட்டுக்களையும், புதுமுக வீரர் வார்ப் 30 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக் களையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு 171 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி என்ற நிலையில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 32.2 ஓவரில் மூன்று விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

துடுப்பாட்டத்தில் ரெஸ்கொதிக் 33, சோலங்கி 52 ஓட்டங்களையும், அன்ரூஸ் ரோஸ், பிலின்டொப் ஆகியோர் ஆட்டமிழக்காது 41, 34 ஓட்டங்களை முறையே பெற்று இங்கிலாந்தை வெற்றிப் பாதைக்கு இட்டுச் சென்றனர். இதில் அன்ரூ பிலின்டொப் 23 பந்துகளைச் சந்தித்து 3 ஆறு ஓட்டங்கள் அடங்கலாக 34 ஓட்டங்களைப் பெற்றமை குறிப் பிடத்தக்கது. வோகன் ஓட்டம் எதுவும் பெறாமல் ஆட்ட மிழந்தார்.பந்து வீச்சில் பாலாஜி இரண்டு விக்கெட்டுக் களையும், இர்பான் பதான் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இரு அணிகளுக்குமிடையிலான இரண்டாவது போட்டி நாளை நடைபெறவுள்ளது.

## மோசமான காலநிலையே பதக்கம் பெறும் வாய்ப்பைத் தடுத்தது

### -அஞ்சு ஜோர்ஜ்



"பலமாக வீசிய காற்று, மோசமான சுற்றுப்புறச் சூழல் போன்றவற்றால் எனக்குத் தலைச் சுற்று ஏற்பட்டது. இதனால் சிறப்பாக முயன்ற போதும், பதக்கத்தைப் பெற இயலாமல் போனது" என்கிறார் சோகத்துடன் அஞ்சு ஜோர்ய்.

எதென்ஸ் ஒலிம்பிக்கில் இந்தியாவின் கடைசி எதிர்பார்ப்பாக அஞ்சு ஜோர்ய் மட்டுமே இருந்தார். ரத்தோர் தந்த வெள்ளிக்குப்பிறகு, இன்னொரு பதக்கத்தை அஞ்சு தருவார் என்று இந்தியாவே நம்பியது. இதற்கேற்ப முதல் வாய்ப்பிலேயே 6.83 மீற்றர் தூரம் தாண்டி சாதிக்க நம்பிக்கை அதிகரித்தது. ஆனால் இரு முறை தவறு செய்த இவரால் ஆறாவது இடத்தையே பிடிக்க முடிந்தது. இவரது 6.83 தூரம் புதிய தேசிய சாதனையாக அமைந்தது மட்டுமே ஆறுதல் தந்தது.

ஒலிம்பிக் தடகள வரலாற்றில் பி.டி.உஷா (1984, லாஸ் ஏஞ்சல்ஸ்-400 மீ. தடைதாண்டுதல்) மில்காசிங் (1960, ரோம்-200 மீ.ஓட்டம்) குர்பஜன்சிங் ரந்த்வா (1964,டோக்கியோ-110மீ., தடைதாண்டுதல்) ஸ்ரீராம் சிங் (1976, மான்ட்ரீல்-800மீ. ஓட்டம்) ஆகியோர் வரிசையில் இறுதிப்போட்டிக்கு முன்னேறிய அஞ்சு, இவர்களைப் போலவே பதக்கம் பெறத் தவறியது ஏமாற்றமளிக்கும் விடயம்.

2003, பாரிஸ் உலகத் தடகள சம்பியன்ஷிப் போட்டியில் வெண்கலம் வென்ற அஞ்சு. ஏதென்சில் சாதிக்க முடியாததற்கு அங்கு நிலவிய சூழ்நிலைகளும் ஒரு காரணமாக அமைந்துள்ளது. "இம்முறை போட்டி மிகவும் கடினமானதாக இருந்தது. தவிர காற்றும் பலமாக வீசியது. சுற்றுப்புறச்சூழல் மிகவும் மோசமாக இருந்தது. இதனால் முதல் வாய்ப்பு முடிந்ததும் எனக்குத் தலை சுற்றியது. லேசான மயக்கமும் வந்தது. இதற்குப்பின் எனது செயற்பாட்டிலும் முன்னேற்றம் ஏற்படவில்லை என்றார்.

## கராச்சியில் விளையாட சிறிலங்கா மறுப்பு

## பாக். கிரிக்கெட் சபைக்கு புதிய சிக்கல்



சிறிலங்கா கிரிக்கெட் அணி எதிர்வரும் ஒக்டோபர் மாதம் பாகிஸ்தானுக்குச் சுற்றுலா மேற்கொள்ளவுள்ளது.

இதன்போது பாகிஸ்தான், சிம்பாப்வே அணிகள் கலந்து கொள்ளும் மும்முனை ஒரு நாள் தொடரில் கலந்துகொள்வதுடன் பாகிஸ்தான் அணியுடனான இரண்டு டெஸ்ட் போட்டியிலும் சிறிலங்கா அணி விளையாடவுள்ளது.

இந்த நிலையில், பாகிஸ்தானின் சில ஆடுகங்களில் விளையாட முடியாது என சிறிலங்கா அறிவித்துள்ளது.

அது பாகிஸ்தான் கிரிக்கெட் சபைக்கு புதிய சிக்கலை ஏற்படுத்தியுள்ளது. உதாரணமாக பல நாடுகள் பாகிஸ்தானுக்கு சுற்றுலாவுக்குச் செல்ல முடியாது. அங்கு எமது வீரர்களுக்கு பாதுகாப்பு இல்லை என்று சுற்றுலாக்களை இரத்துச் செய்திருந்தன. இந்தியாவும் இறுதியாகக் கராச்சியில் நடைபெறவிருந்த போட்டியை இரத்துச் செய்திருந்தது.

இந்த நிலையில், சிறிலங்கா அணி கலந்துகொள்ளும் ஒருநாள் போட்டி கராச்சி மைதானத்தில் இடம்பெறவிருப்பதாக பாகிஸ்தான் கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது. இதற்கு சிறிலங்கா கிரிக்கெட் அணி மறுப்புத் தெரிவித்துள்ளது.

## ஐ.சி.சி. மினி உலகக்கிண்ண கிரிக்கெட் அமெரிக்க அணியில் 5 பாகிஸ்தானிய வீரர்கள்

எதிர்வரும் 10ஆம் திகதி இங்கிலாந்தில் ஆரம்பமாகும் ஐ.சி.சி மினி உலகக்கிண்ணப் போட்டிகளில் பங்கேற்கும் அமெரிக்க அணியில் ஐந்து பாகிஸ்தானிய நாட்டவர் அங்கம் வகிக்கிறார்கள். அவர்களுள் அணியின் உப தலைவரான நசிர்ஜாவிட்டும் அடங்குகிறார். அமெரிக்க அணி 10ஆம் திகதி பலமான நியூசிலாந்துடனும், 13ஆம் திகதி அவுஸ்திரேலியாவுடனும் மோதும். இது அமெரிக்காவுக்கு கன்னிப்போட்டியாகும்.

லாகூரில் பிறந்த நசிர்ஜாவிட் புளோரிடா வாசியாவார். இவர் உள்ளூர்ப் போட்டிகளில் திறமையாக செயற்படுபவராகக் கூறப்படுகிறது. இவர் சார்லி என அங்கு அழைக்கப்படுகிறார்.

ஏனைய வீரர்கள் அய்ஜாஸ் அலி(கராச்சி) நசிர்சியா,ரஸித் சியா( குஜரன்வாலா) இம்ரான் பர்வயிஸ் அவான்ரன்வாலா (சியாஸ் கொட்) நியூயோர்க்கில் பிறந்தவரான லியன்றோமரோ மட்டுமே அவ்வணியின் சொந்தமண் வீரராவார். ஏனைய வீரர்கள் கரிபியன்தீவு, யமேக்கா ஆகிய இடங்களைச் சேர்ந்தோர் ஆவர்.




### உருத்திரபுரம் வி. க. நடாத்தும்


## கால்பந்து போட்டியின் அரையிறுதி, இறுதிப் போட்டி

உருத்திரபுரம் விளையாட்டுக்கழகத்தால் நடாத்தப்பட்டகால்பந்துப் போட்டியின் அரையிறுதி, இறுதிப் போட்டிகள் வரும் ஞாயிற்றுக்கிழமை (05-09-2004) அன்று நடைபெறவுள்ளதாக போட்டி ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

உருத்திரபுரம் விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ள மேற்படி அரையிறுதிப் போட்டிகளில் புதுக்குடியிருப்பு விக்கினேஸ்வரா அணியை எதிர்த்து உருத்திரபுரம் ம.வி. அணியும் சந்திரோதயா அணியை எதிர்த்து சோலை அணியும் மோதவுள்ளன.

காலை தொடக்கம் நடைபெறவுள்ள இப்போட்டியின் இறுதிப் போட்டி அன்று மாலை நடைபெற்று பரிசளிப்பு விழாவும் நடைபெறவுள்ளதாக உருத்திரபுரம் விளையாட்டுக் கழகத்தினர் அறிவித்துள்ளனர்.

## இந்திய கிரிக்கெட் சபைத் தலைவராக ஜக்மோகன் டால்மியா நீடிப்பாரா?



இந்தியாவின் கிரிக்கெட் சபைத் தலைவராக மிகச் சிறப்பாகப் பங்காற்றி வந்த ஜக் மோகன் டால்மியா தொடர்ந்து அந்தப் பதவியில் இருப்பாரா என்ற கேள்வி எழுந்துள்ளது. இந்திய கிரிக்கெட் சபைத் தலைவரை தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் இம் மாதம் இடம்பெறவுள்ளது. ஜக்மோகன் டால்மியா இந்திய கிரிக்கெட் சபையின் "கிங் மேக்கர்" என்ற பட்டத்தைப் பெற்றவர். எனவே, தொடர்ந்து அவர்தான் பதவிவகிக்க வேண்டும் என்பது அனைவரது விருப்பமாக இருந்தாலும், அவருக்கு அடுத்தபடியாக ரந்தீர்சிங் மகேந்திர மற்றும் அருன் ஜெட்லி ஆகியோர் இந்தப் பதவிக்கு போட்டியிடுகின்றனர். இவர்கள் அரசியற் பலம்மிக்கவர்களாகவுள்ளனர். எனவே, இது அவரைப் பாதிக்கலாம் என எதிர்வு கூறப்படுகின்றது.

**சிந்தனைக்கு**



அந்நிய காலணித்துவ ஊடுருவல் எமது சுதேசிய பொருளாதாரக் கட்டுப் கோப்பைச் சீர் குலைத்தது.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 02-09-2004
மின் அஞ்சல் Daily@ eezhanatham. com
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948

# போர் நிறுத்த மீறல்களை கண்காணிப்புக் குழு மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும்

## -சிறிலங்கா பதில் பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும், சிறிலங்கா அரசிற்கும் இடையில் உள்ள போர்நிறுத்த உடன்படிக்கையை மீறும் வகையில் நடைபெறும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அந்த விடயம் தொடர்பாக போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு மக்களைத் தெளிவுபடுத்த வேண்டுமெனப் பதில் பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறிவிக்கிரமநாயக்க கூறியுள்ளார்.

தமது அமைச்சு அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற வைபவம் ஒன்றிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் இது தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையில்; இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிற்கு முக்கிய கடமை ஒன்றுள்ளது.போர்நிறுத்த உடன்படிக்கை வெவ்வேறு சந்தர்ப்பங்களில் மீறப்பட்டுள்ளன.

அவர்கள் கூறுவதுபோலவே நாங்கள் பல்வேறு சம்பவங்களில் போர் நிறுத்த உடன்படிக்கையை மீறி உள்ளோம் இவ்வாறான சந்தர்ப்பங்களில் இவர்கள் போர் நிறுத்த உடன்படிக்கையை மீறி உள்ளனர் என்பதை பொதுமக்களுக்குத் தெளிவுபடுத்தும் பொறுப்பு போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவைச் சார்ந்தது என்றார்.

# இரு குழுக்களுக்கிடையான மோதலில் முன்னாள் பா.உ ஒருவர் படுகாயம்

(கொழும்பு)

இரண்டு குழுக்களிடையே ஏற்பட்ட மோதலில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரும் அவரது ஆதரவாளர் ஒருவரும் படுகாயம் அடைந்தனர்.

சென்ற சனிக்கிழமை கந்தளாய் பராக்கிரம மாவத்தையில் மரண வீடு ஒன்றில் ஏற்பட்ட இக்குழு மோதலில் முன்னாள் திருகோணமலை மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்ற உறுப்பினரான சுனில் சாந்தரணவீரவும் அவரது ஆதரவாளர் ஒருவருமே படுகாயமடைந்து கந்தளாய் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றனர்.

மேற்படி மோதலில் ஈடுபட்ட குழுக்களில் ஒன்று, குறித்த பாராளுமன்ற உறுப்பினராலேயே வழிநடத்தப்பட்டதாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் கந்தளாயப் பொலிசார் கூறியுள்ளனர்.

# அடுத்த சில வாரங்களில் பொருட்களின் விலை குறையுமாம்

## அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே தெரிவிப்பு

அடுத்த சில வாரங்களுக்குள் அத்தியாவசியப் பொருட்களின் விலைகளைக்குறைக்கப் போவதாக அமைச்சர் ஜெயராஜ் பெர்ணாண்டோ புள்ளே நேற்றுத் தெரிவித்துள்ளார்.

உலக சந்தையில் பெற்றோலியத்தின் விலை அதிகரித்துள்ளமையால் பொருட்களின் விலை உயர்ந்துள்ளது.எனினும் உற்பத்தியாளர்களுக்கும், விவசாயிகளுக்கும் நட்டத்தை ஏற்படுத்தாது பாவனையாளர்களுக்கு நிவாரணம் வழங்குவது தமது பொறுப்பென அரசாங்கம் கருதுகிறதென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# இணையத் தொடர்பு இடையூறிற்கு சதிவேலை இடம்பெற்றதே காரணம்!

## அமைச்சர் எம் ஜெயரட்ண

கடந்த வாரம் இணையத் தொடர்புகளில் ஏற்பட்ட இடையூறுகளின் பின்னணியில் சதி வேலை ஒன்று இடம்பெற்றிருப்பதாக தபால் தொலைத் தொடர்புகள் துறை அமைச்சர் டி.எம் ஜெயரட்ண தெரிவித்துள்ளார்.

இந்த சதி வேலையுடன் தொடர்புடையவர்கள் குறித்து உடனடியாகக் கருத்துத் தெரிவிக்க முடியாது என்று கூறியுள்ள அமைச்சர் ஆனால் மிகப்பெரிய சக்தி ஒன்றின் துணையுடனேயே இந்த சதித்திட்டம் அமுறப்படுத்தப் பட்டிருப்பது தெரியவந்துள்ளது என்றும் கூறினார்.

கடலடி தொடு கம்பிகள் சேதப் படுத்தப்பட்டமையால் இணைத் தொடர்புகளில் பாதிப்பு ஏற்படுத்தப்பட்டது.இதன் காரணமாக 5 மில்லியன் அமெரிக்க டொலர் நட்டம் ஏற்பட்டதாக மதிப்பிடப் பட்டுள்ளது.முன்னதாக இந்திய நிறுவனம் ஒன்றிற்குச் சொந்தமான எம்.வி.நாலாந்து என்ற கப்பல் கடலடிதொடு கம்பிகள் உள்ள பகுதியில் நங்கூரமிட்டமையால் இந்த அனர்த்தம் ஏற்பட்டதாக தெரிவிக்கப்பட்டு அந்தக் கப்பல் தடுத்து வைக்கப்பட்டிருந்தது. பின்னர் இடம்பெற்ற விசாரணைகளின் போது இந்தச் சம்பவத்தில் குறிப்பிட்ட கப்பல் சம்பந்தப்பட்டிருக்கவில்லை என்பது உறுதிப்படுத்தப் பட்டு அந்தக் கப்பல் தனது பயணத்தைத் தொடர அனுமதிக்கப்பட்டுள்ளது.

தற்போது இந்தச் சம்பவம் குறித்து விசாரணைகளை மேற்கொள்ள மூவர் கொண்ட விசேட குழு ஒன்று அமைக்கப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப் படுகின்றன. நேற்று ஆரம்பிக்கப் பட்டுள்ள விசாரணைகளின் முடிவில் கடலடி தொடு கம்பிகளை சேதப்படுத்திய சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் இனம் காணப்படுவார்கள் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (32)

# இலங்கை மின்சாரசபை தொழிற் சங்கங்கள் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

இலங்கை மின்சாரசபை தொழிற்சங்கக் கூட்டமைப்பு பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்து இலங்கை மின்சாரசபை பிரதான அலுவலகத்திற்கு முன்பாக நேற்று நண்பகல் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தி உள்ளனர்.

இதன் போது நுசைச்சோலை, மேல் கொத்மலை போன்ற இடங்களில் அமைக்க உத்தேசிக்கப்பட்ட மின் நிலையங்களை உடனடியாக ஆரம்பிக்கவேண்டும் எனவும் இலங்கை மின்சாரசபையால் 2003ஆம் ஆண்டிற்கு வழங்கப்பட வேண்டிய சம்பள அதிகரிப்பு இதுவரை வழங்கப்படவில்லை எனவும் தொழிற்சங்கக் கூட்டமைப்பின் ஏற்பாட்டாளர் எஸ்.கே.ஆனந்த தெரிவித்தார். இதேவேளை கடந்த அரசோ அல்லது தற்போது ஆட்சியிலுள்ள அரசோ மின்சார சபையை தரம்மிக்கதாக்க எந்தவித முயற்சியையும் எடுக்கவில்லை எனவும் குற்றம் சாட்டப்பட்டதுடன்.

இலங்கையில் திறந்த பொருளாதாரம் அறிமுகம் செய்யப்பட்ட பின்னர். இலங்கை மின்சார சபைபோன்ற தேசிய சொத்துக்களை தனியார்துறைக்கு விற்பனை செய்யும் போது மோசடி ஒன்றை அன்று முதல் ஆட்சியில் இருந்த அரசாங்கங்கள் ஒவ்வொரு விதமாக, ஒவ்வொரு கொள்கையின கீழ் நடைமுறைப்படுத்தி வருகின்றன. எனவும் குற்றச்சாட்டுக்கள் தெரிவிக்கப்பட்டன.

# 24,287 பட்டதாரிகளுக்கு வரும் 15ஆம் திகதி பயிற்சி ஆரம்பம்

அரச சேவையில் புதிதாக சேர்த்துக்கொள்ளப்பட்ட 24,287 பட்டதாரிகளுக்கான மூன்று மாதகாலப் பயிற்சி எதிர்வரும் 15ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

இதேவேளை முதற்தடவை பெயர்விபரம் வெளியான 17ஆயிரம் பட்டதாரிகளுக்கான பயிற்சி இன்று ஆரம்பமாகவுள்ளது. நாடெங்கிலுமுள்ள 215 நிலையங்களில் பயிற்சி பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தேவை அவர்களினது எனின்...!

காங்கேசன்துறைச் சிமெந்துத் தொழிற்சாலையையும், புல்மோட்டை இல்மனைட் தொழிற்சாலையையும் இயங்க வைக்கும் முயற்சியில் சிறிலங்கா ஆட்சியாளர்கள் தீவிர அக்கறை கொண்டுள்ளனர். இதற்கான முன்னோடி நடவடிக்கைகளையும் அவர்கள் மேற்கொள்ளத் தொடங்கியுள்ளனர்.

இந்தவகையில் காங்கேசன்துறை சிமெந்து ஆலையைத் திறப்பதுதொடர்பாக ஆராய்வதற்கென இலங்கைச் சிமெந்துக் கூட்டுத்தாபனத் தலைவர் பந்துலவெல்லால தலைமையிலான குழுவொன்று யாழ்.குடாநாட்டிற்குச் சில தினங்களுக்கு முன் விஜயம் செய்து, நிலைமைகளைப் பார்வையிட்டுச் சென்றுள்ளது. இது குறித்து ஊடகவியலாளரிடம் பேசிய பந்துலவெல்லால சிமெந்துத் தொழிற்சாலை இயங்குவது தொடர்பாக அதனுடன் சம்பந்தப்பட்ட சகல தரப்பினருடனும் பேச்சுக்களை ஆரம்பித்துள்ளதாகத் தெரிவித்தார்.

அத்தோடு "சிமெந்துத் தொழிற்சாலை உயர்பாதுகாப்பு வலயத்தில் அமைந்திருந்தாலும், அதனை இயங்கவைப்பதற்கு இராணுவத்தரப்பு முழு ஒத்துழைப்புத்தரத் தயாராக உள்ளது" எனவும் தெரிவித்தார். இதேவேளை யாழ்.இல் வேறொரு நிகழ்வில் பேசிய அவர், "எப்பொழுதும் உயர்பாதுகாப்பு வலயம் எனக்கூறிக் கொண்டிருக்க முடியாது" எனவும் தெரிவித்தார்.

யுத்தநிறுத்த காலம் என்பது சமாதானப் பேச்சுவார்த்தைக்கும், அரசியற்தீர்விற்குமான காலம் என்பதும், யுத்தத்தினால் பாதிப்புற்ற மக்களின் புனர்வாழ்விற்கான காலம் என்பதும் மறந்துபோய் வடக்கு-கிழக்கிலுள்ள வளங்களைச் சுரண்டுவற்கானது, தெற்கின் உற்பத்திப்பொருட்களையும் சந்தைப்படுத்தப்படமுடியாத பொருட்களையும் விற்பனைசெய்வதற்கானதுமான ஒரு காலப்பகுதியாகவே இன்று சிங்கள ஆட்சியாளர்களினால் நோக்கப்படுகின்றது. அதாவது குடியேற்றவாதிகள் மூலவளங்களைச் சுரண்டி உற்பத்திப் பொருட்களைச் சந்தைப்படுத்தியது போன்றே சிங்கள ஆட்சியாளர்கள் நடந்துகொள்ள முற்பட்டு நிற்கின்றனர்.

வலி.வடக்கில் இருந்து 1990ஆம் ஆண்டில் குடிபெயர்ந்த பல்லாயிரக்கணக்கான மக்கள் இன்னமும் அகதிகளாக நண்பர்கள், உறவினர்கள் வாடகைக்குப் பெற்ற வீடுகள், அகதிமுகாம்கள் என வாழ்ந்துகொண்டிருக்கின்றனர். தமது சொந்த இடத்தில், சொந்த வீட்டில் வாழ்வதற்கு அனுமதிக்க வேண்டும் என அவர்கள் பல்வேறு போராட்டங்களை நடத்தியுள்ளனர். ஆனால் இதற்கு இராணுவமோ, பாதுகாப்பு அமைச்சோ செவிசாய்த்ததாக இல்லை.அத்தோடு, இம்மக்களின் சொந்த நிலங்களை இராணுவத்தரப்பு ஆக்கிரமித்திருப்பதும், அதனை உயர்பாதுகாப்பு வலயம் எனக் கூறுவதும் சட்டத்திற்கும், நீதிக்கும் புறம்பானது என்பதும், உறுதிசெய்யப்பட்டும் உள்ளது. அவ்வாறு இருந்தும் இராணுவத்தரப்போ, அன்றிப் பாதுகாப்பு அமைச்சோ அம்மக்களின் நிலங்களை வழங்க, அவர்களைச் சொந்த வீடுகளில் குடியமர அனுமதிக்கவில்லை.

ஆனால், உயர்பாதுகாப்பு வலயத்தில் அதுவும் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த காங்கேசன்துறை முகத்திற்கு அண்மையில் உள்ள சிமெந்துத் தொழிற்சாலையை இயங்க வைப்பதற்கு இராணுவத்தரப்பு சம்மதம் தெரிவித்துள்ளது. அதாவது உயர்பாதுகாப்பு வலயத்தில் மக்களை அனுமதிக்காத இராணுவம் காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலைக்கு ஊழியர்களை அனுமதிக்கத் தயாராகவுள்ளது.

ஏனெனில் சிறிலங்கா ஆட்சியாளர்களுக்கு காங்கேசன்துறைப் பகுதியில் காணப்படும் மூலப்பொருள்(சுண்ணக்கல்) அவசியம் தேவையாகவுள்ளது. சர்வதேச சந்தையில் சிமெந்தின்விலை அதிகரித்துச் செல்வதும், சிறிலங்காவின் பொருளாதாரம் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ள நிலையில் பெரும் இலாபத்துடன் இயங்கக்கூடியதான இத்தொழிற்சாலையை மீண்டும் இயங்கவைப்பதென்பது அவர்களுக்குப் பெரும்பயன் அளிக்கத்தக்கதாகும். இதுபோன்றதே இல்மனைற் தொழிற்சாலையை இயங்கவைக்கும் முயற்சியாகும்.

அதாவது தமிழர் தாயகத்தில் உள்ள முக்கிய வளங்களைச் சுரண்டியெடுத்துவிட ஆட்சியாளர்கள் மேற்கொள்ளும் முயற்சிகளே இவையாகும். இதற்கென அவர்கள் தமது பாதுகாப்பு ஏற்பாடுகளையும் மாற்றி அமைக்கவும் தயாராகவேயுள்ளனர். இது தொடர்பாகச் சம்பந்தப்பட்டவர்களுடன் பேசுவதாகக் கூறும் பந்துலவெல்லால "எப்பொழுதும் உயர்பாதுகாப்பு வலயம் எனக் கூறிக் கொண்டிருக்க முடியாது" எனவும் தெரிவிக்கின்றார்.

அதாவது, சிங்கள ஆட்சியாளர்கள் தமது தேவைகளைப் பொறுத்து உயர்பாதுகாப்பு வலயம் என்பது குறித்தே கேள்வியெழுப்பும் நிலையில் உள்ளனர். ஆனால், சொந்த மக்களின் அடிப்படை மனித உரிமைகளைக் கூட அவர்கள் பேணவோ, மதிக்கவோ தயாராக இல்லை.

ஆனால், பந்துலவெல்லால போன்றவர்களும் சரி, சிறிலங்கா அரசும் சரி ஒன்றைப்புரிந்துகொள்ள வேண்டும். அதாவது காங்கேசன்துறையும் சரி, புல்மோட்டையும் சரி, தமிழர் தாயகப் பிரதேசம் என்பதையும், அங்குள்ள சுண்ணக்கல்லும் சரி, இல்மனைற்றும் சரி தமிழருக்கே உரித்தான வளங்கள் என்பதையும் ஆகும். ஆகையினால் அவற்றைப் பெறுவதற்கு தமிழ் மக்களிடம் அனுமதி பெறப்பட வேண்டுமே ஒழிய சிங்கள இராணுவத்திடமோ அன்றி சிறிலங்கா ஆட்சியாளர்களிடமோ இல்லை. இதனை மீறிக்குடியேற்றவாதிகள் போன்று செயற்பட்டால் இன்றைய அரசியல் சூழ்நிலைக்குப் பொருத்தப்பாடானதாக இருக்கமாட்டாது.

## ஏறாவூர்...

நண்பர்களுடன் உரையாடிக் கொண்டிருந்த வேளையில், அங்கே சென்ற இனந்தெரியாத ஆயுதபாணிகள் ரி-56 ரக துப்பாக்கியினால் சரசமாரியாக வேட்டுக்களை தீர்த்துவிட்டு தப்பிச் சென்றுள்ளதாக ஏறாவூர் பொலிசார் தெரிவித்தனர். இச்சம்பவத்தில் உயிர் தப்பிய மற்றுமொருவரை ஏறாவூர் பொலிசார் தடுத்து வைத்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். இதே வேளை, தியதன்னா ஓயா ஆற்றிலிருந்து இனந்தெரியாத சடலமொன்று நேற்றுக் காலை மீட்கப்பட்டுள்ளது. வயோதிபர் ஒருவரின் சடலமாக இது இருக்கலாம் என்று பொலிசார் தெரிவித்துள்ளனர்.(32)


## சமாதானப் பேச்சுக்களை...

ஏற்றுக்கொள்ள முடியாதது என பாராளுமன்ற உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினர். பேச்சுவார்ததைகளை இடைக்கால தன்னாட்சியின் அடிப்படையில் ஆரமபிக்க தமிழீழ விடுதலைப்புலிகள் தயாராக உள்ளனர். இந்த நிலையில் சிறிலங்கா அரசாங்கம் உடனடியாக ஆரம்பிப்பதற்கு ஐரோப்பிய ஒன்றியம் உட்பட்ட உலக நாடுகள் வலியுறுத்தல் விடுக்க வேண்டும் என்ற கோரிக்கையையும் கூட்டமைப்பு பா.உ.கள் இந்த சந்திப்பின் போது முன்வைத்தனர்.

சிறுவர்களைப் படைகளிற் சேர்ப்பது தொடர்பாகத் தொடந்தும் தமிழீழ விடுதலைப்புலிகள் மீது குற்றம் சுமத்தப்படுகின்ற போதும் அவ்வாறான நடவடிக்கைகளைத் தமிழீழ விடுதலைப்புலிகள் மேற்கொள்வதில்லை எனவும் அவர்கள் பிரான்ஸ் நாட்டு உதவி உயர்ஸ்தானிகரிடம் தெரிவித்தனர்.

(32)

# வவு. சிதம்பரபுரம் பெண் கொலை சந்தேக நபர்கள் வாக்குமூலம்



(செட்டிகுளம்)

வவுனியா சிதம்பரபுரம் பகுதியில் மலக்குழியில் இருந்து எடுக்கப்பட்ட எலும்புக் கூட்டுக்குரிய பெண்ணின் கொலையுடன் தொடர்புடையவர்கள்என்று கைது செய்துவைக்கப்பட்டு இருக்கும் மூன்று சந்தேக நபர்களும் குற்ற ஒப்புவாக்கு மூலத்தினை வவுனியா மாவட்ட நீதவான் மாணிக்கவாசகம் இளஞ்செழியன் முன்னிலையில் நேற்று அளித்துள்ளனர் மேற்படி நபர்கள் 24 ஆம் திகதி கைது செய்யப்பட்ட போது அவர்கள் பொலிசாரிடம் குற்ற ஒப்பு வாக்கு மூலத்தினைக் கொடுப்பதற்கு தயாராக இருந்தனர் எனினும் பொலிசாருக்கு கொடுத்தால் அவர்களினை வற்புறுத்திப் பெற்றதாகவும் கருதவாய்ப்பு இருப்பதன் காரணமாகவும் அவர்கள் சுய நினைவுடன் இருக்க வேண்டும் என்ற காரணத்தால் 5 நாள் தவணை கொடுக்கப்பட்டது.

இந்த வழக்கில் பிரதான சந்தேக நபராகக் கருதப்படும் மெண்டிஸ் திலக்ராஜா தனது வாக்கு மூலத்தில் இறந்த பெண்ணுக்கும், தனக்கும் 2 வருடம் தொடர்பு இருந்ததாகவும் 03.12.03 அன்று கதைக்கின்ற போது இருவருக்கும் இடையில் வாக்குவாதம் இடம் பெற்றதாகவும் தனது பெற்றோரைப் பற்றி அந்தப் பெண் கேவலமாக பேசியதாகவும் இதன் பின்னர் அந்தப் பெண்ணைத் தான் தாக்கியதாகவும் சுவருடன் சாத்திவைத்து கழுத்தை நெரித்ததாகவும் தெரிவித்துள்ளார் அந்த பெண் சுயநினைவு இழந்ததாகவும் தெரிவித்துள்ளார்.

மூன்று பேரின் குற்ற ஒப்பு வாக்கு மூலத்தினைப் பதிந்த வவுனியா மாவட்ட நீதவான் சந்தேக நபர்கள் மூவரையும் 13.09.04 வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

## நான்கு நாள்...

மேற்படி கண்காட்சியின் ஆரம்பநிகழ்வு நேற்று முற்பகல் 10.00 மணிக்கு ஆரம்பமாகியது. ஆரம்ப நிகழ்வாக நிகழ்விற்கு வருகை தந்த விருந்தினர்கள் ஒருங்கிணைந்த மாதிரிப் பண்ணை முன்றலில் இருந்து மங்கல வாத்திய இசை மற்றும்,குட முருட்டல் நடனம் சிறுமியர் நடனமுடன் மண்டபவாயிலுக்கு அழைத்து வரப்பட்டனர்.

பொது ஈகச்சுடரினை விவசாயக்கால்நடை அமைச்சு மேலதிக செயலர் டாக்டர் சாம்சான்டானியல் ஏற்றிவைக்க, தமிழீழத் தேசியக் கொடியினை அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழச்செல்வன் அவர்கள் ஏற்றிவைத்தார்.

அகவணக்கத்தினைத் தொடர்ந்து மங்கல விளக்கினை மாகாணசபை பிரதிவிவசாயப் பணிப்பாளர் க.சுப்பிரமணியம் ஏற்றிவைத்தார்.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன பொறுப்பாளர் கரிகாலன் தலைமையில் நிகழ்வுகள் ஆரம்பமாகியது.

வரவேற்புரை, தல்லமையுரைகளை தொடர்ந்து சிறப்புரைகள் இடம் பெற்றது.

சிறப்புரைகளை அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழச்செல்வன் அவர்கள், விவசாயக்கால்நடை அமைச்சின் மேலதிக செயலர் டாக்டர் சாம்சண்டானியல், மாகாணசபை பிரதிவிவசாயப் பணிப்பாளர் க.சுப்பிரமணியம், கால்நடை இனப்பெருக்கப்பகுதி மத்திய விவசாயக் கால்நடை அமைச்சின் பணிப்பாளர் டாக்டர் கதிரவேற்பிள்ளை, கிளிநொச்சி மாவட்ட கமக்கார அமைப்புத் தலைவர் மகேந்திரன் ஆகியோர் வழங்கினர். உதவி விவசாயப் பணிப்பாளர் திருமதி சீ. ஆனந்தராசா நன்றியுரை நிகழ்த்தினார்.

அடுத்து விருந்தினர்கள், துறைசார் அதிகாரிகள், விவசாயப் பெருமக்கள் ஆகியோர் விவசாயக் கண்காட்சிகளைப் பார்வையிட்டனர்.

நாளை மறுதினம் வரை மேற்படி கண்காட்சி இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(சோ,கு)

## தமிழீழ...

துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் தமிழீழ வைப்பகம் தனது பத்தாவது ஆண்டிலே பத்தாவது கிளையை முல்லை மண்ணில் திறந்து வைக்கின்றது. ஆனால் முல்லைத்தீவுக்கான கிளை 1996 ஆம் ஆண்டேபுதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இதைவிட முல்லைத்தீவு மாவட்டங்களில் ஏற்கனவே மூன்று கிளைகள் இயங்கி வருகின்றன. இம்மூன்று கிளைகளுடன் இன்று இந்த நான்காவது கிளையை நாங்கள் ஆரம்பித்திருக்கின்றோம் இந்த மூன்று கிளைகளிலும் 200 மில்லியனுக்கு மேற்பட்ட நிதி முதலீடு செய்யப்பட் டிருக்கின்றது. இதில் கல்விச் சமூகம் வர்த்தகச் சமூகம் எனப் பொதுவான சமுதாய முன்னேற்றத்திற்காக இவை பணிகளை ஆற்றி வருகின்றன. மேலும் தமிழீழ வைப்பக வாடிக்கையாளர்களின் வைப்புக்களுக்கு எது தேசியத்தலைமையினாலும் தமிழீழ விடுதலைப்புலிகளின் அமைப்பினாலும் முழுமையான உத்ரவாதமளிக்கப்பட்டிருக்கின்றது. என அவர் கூறினார்.

நேற்று மதியம் 12.00 மணியளவில் ஆரம்பமான இத்திறப்பு விழா நிகழ்வின் பொதுச்சுடரினை முல்லை மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கங்களின் சமாசத் தலைவர் மரியராசா அவர்களும் சேரன் வாணிபப் பணிப்பாளர் இளம்பரிதி அவர்களும், கிருஷ்ணசாமி அவர்களும் ஏற்றிவைக்க, தமிழீழ தேசியக் கொடியினை முல்லை மாவட்ட கடற்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் ரங்கன் அவர்களும் ஏற்றினார். தொடர்ந்து வைப்பகக் கொடியினை தமிழீழ வைப்பக மேலாண்மைப் பணிப்பாளர் ம.வீரத்தேவன் அவர்கள் ஏற்றிவைக்க, வைப்பகக்கிளையின் பெயர்ப் பலகையினை வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கனகரத்தினம் அவர்கள் திரைநீக்கம் செய்தார். தொடர்ந்து ஆசியுரைகளைக் கரைதுறைப்பற்று பிரதேச சபையின் விசேட ஆணையாளர் கிருஷ்ணபிள்ளை அவர்களும், வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கனகரத்தினம் அவர்களும், முல்லைத்தீவு வர்த்தக சங்கத் தலைவர் உதயகுமார் அவர்களும் நிகழ்த்த, சிறப்புரையினை தமிழீழ வைப்பக மேலாண்மைப் பணிப்பாளர் வீரத்தேவன் அவர்கள் நிகழ்த்தினார். முல்லைத்தீவுக் கிளையின் ஆளுகை மேலாளர் ம.கியூபேட் அன்ரனி அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வுகளைத் தொடர்ந்து வைப்பகக் கிளையினை தமிழீழ விடுதலைப்புலிகளின் மகளிர் படைத் தளபதி கேணல் விதுஷா அவர்கள் நாடாவை வெட்டித் திரைநீக்கம் செய்து வைத்தார்.

இந்நிகழ்வில் பெருந்தொகையானவர்த்தகர்கள், பொதுமக்கள், பாடசாலை மாணவர்கள், போராளிகள், காவல்துறை உறுப்பினர்கள் எனப்பலரும் கலந்துகொண்டதோடு வைப்புக்களையும் செய்தனர். அத்தோடு இவ்வைப்பக கிளைத் திறப்புவிழாவில் கலந்துகொண்ட மக்கள் தமிழீழ வைப்பகத்தின் சேவை மகத்தானது என்றும் வங்கி என்றால் எவ்வாறு இயங்க வேண்டும் என்பதை எடுத்துக்காட்டும் நிறுவனமாக இயங்குவது பெருமைக்குரியது எனவும், இதன் பணி மேலும் வளர வேண்டும் எனவும் வாழ்த்துத் தெரிவித்தனர். (ச,தீ)

## சமாதான...

களின் எதிர்பையும் மீறி சனாதிபதி சமாதானப் பேச்சுக்களை நேரடியாக முன்னெடுக்கவுள்ளதாக தெரிவிக்கும் சனாதிபதி மாளிகை வட்டாரங்கள் மக்கள் விடுதலை முன்னணியினர் இந்த விடயத்தில் விட்டுக் கொடுக்க மறுத்தால் அவர்களை வெளியேற்றிய பின் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவுடன் ஆட்சியைக் கொண்டு செல்வதற்கு சனாதிபதி தீர்மானித்துள்ளதாகவும் தெரிவிக்கின்றன.(32)

## இந்தியாவில்...

இதேவேளை அண்மையில் நோர்வே சமாதான ஏற்பாட்டாளர்களுடன் மிலிந்த மொறகொட நடத்திய பேச்சுக்களில் இந்திய தரப்பின் அனுசரணை குறித்து நோர்வே தரப்பால் பிரஸ்தாபிக்கப்பட்டதாக தெரிய வந்துள்ளது.

இதன் அடிப்படையில் இருதரப்பையும் சமாதான் பேச்சு மேசைக்கு அழைத்து வரும் பணியினை இந்தியாவிடம் ஒப்படைப்பது என நோர்வே தீர்மானித்துள்ளதாகவும் தமது தீர்மானங்களை இம்முறை மிலிந்த மொறகொட மூலம் இந்தியாவிற்கு தெரியப்படுத்தியுள்ளதாகவும் மற்றுமொரு செய்தி தெரிவிக்கின்றது. (32)

## எமது...

பொருளாதாரத்திலிருந்து விடுவித்து தன்னிறைவுப் பொருளாதாரத்தை நோக்கி எங்களுடைய தேசம் செல்வதற்கு பலவேலைத்திட்டங்களைக் கடந்த காலங்களிலே மேற்கொண்டிருந்தது. அது போர்ச் சூழலிலும் எங்களுடைய மக்கள் பட்டினிச்சாவிலிருந்து பாதுகாப்பதற்குப் பெரும் பங்காற்றியதை நீங்கள் நன்கு அறிவீர்கள்.

எங்களைப் பொறுத்தவரையில் இந்தக் கண்காட்சி புதுமையானது தான். ஏனெனில் நாங்கள் ஒன்றுமே இல்லாமல் இந்த மண்ணிலே எமது சுய முயற்சி மூலம் நாங்கள் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.

இன்றைக்கொரு சமாதானச் சூழல் ஏற்பட்டிருக்கிறது. இந்தச் சமாதானச் சூழலில் புதிய தொழில்நுட்பங்கள் புதிய முறைகள் அறிமுகப்படுத்துவதையிட்டு எங்களுடைய மக்கள் நிச்சயமாக மகிழ்ச்சியடைவார்கள். இந்த முயற்சிகளையும், நடைமுறைகளையும் அறிமுகப்படுத்துவதன் ஊடாக எங்களுடைய முயற்சியுள்ள மக்களின் பெரும் ஆற்றலை மேம்படுத்தக்கூடியதாக இந்தக்கண்காட்சி அமைந்திருப்பதையிட்டு தேசியத்தலைவர் சார்பாக அனைவருக்கும் எங்களது மகிழ்ச்சியினையும், பாராட்டினையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இடம்பெயர்ந்த பெருமளவான மக்கள் சமாதான காலத்திலே எங்களுடைய பிரதேசத்தையும், யுத்தத்திற்கு முகங்கொடுத்த மக்களையும் பார்த்து ஆறுதல் கூறுவதற்கும். பல உதவிகளைச் செய்வதற்கும் இங்கே வருகை தந்திருந்தார்கள். பல உதவிகளைச் செய்து கொண்டிருக்கின்றார்கள். பல்வேறுபட்ட தேவைகளை அனைத்துத் துறைகளிலுமே தாங்கள் அங்கு பெற்ற அனுபவங்கள், வளர்ச்சிகள், வளங்கள் என்பவற்றைக் கொண்டு வந்து எங்களுடைய தேசத்திலே புகுத்த வேண்டுமென்கின்ற உயரிய நோக்கோடு பல பங்களிப்புக்களைச் செய்து வருகின்றார்கள். அந்த வகையிலே இந்த வட்டக்கச்சிப் பண்ணையை அபிவிருத்தி செய்து மக்களுடைய பொருண் மியத்தை மேம்படுத்துவதற்குரிய ஒரு பயிற்சித்தளமாக, ஒரு மாதிரிப் பண்ணையாக இதனை அமைபதற்கு அமெரிக்காவிலே வாழ்ந்து கொண்டிருக்கின்ற எங்களுடைய தேசப்பற்றுள்ள, மனித நேயமுடைய ஒரு பெரிய மனிதர் பெரிய உதவியினை தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினூடாக பொருண்மியத்திற்கு அன் பளிப்பாக வழங்கியிருக்கின்றார். இந்தப் பண்ணையை மேம்படுத்துவதற்கு அவருடைய பங்கு பெரிய பங்காக அமைந்திருக்கின்றது.

அதுபோல் பல்வேறு துறைகளில் இன்று புலம்பெயர்ந்த மண்ணில் வாழ்கின்ற எங்களுடைய மக்கள் உயர்வடைந்திருக்கின்றார்கள். அங்கே எல்லாத் துறைகளிலும் வளர்ச்சியடைந்திருக்கின்றார்கள். அந்தத் துறைகளை எங்களுடைய தேசத்திலே வந்து தங்களுடைய அனுபவங்களைத் தங்களுடைய ஆற்றல்களை இங்கே பகிர்ந்து கொள்வதற்குத் தயாராகிக் கொண்டிருக்கின்றார். அந்த வகையில் எங்களுடைய தேசியத் தலைவருடைய தீர்க்க தரிசன மான சிந்தனையோடு உருவாக்கப்பட்ட இக் கட்டமைப்புக்கள் இன்று எங்களுடைய தேசத்தில் வலுவடைந்து கொண்டிருக்கின்றது.

இன்று நாங்கள் பல பிரதேசங்களை இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்து மீட்டு எடுத்துள்ளோம்

எதிர்காலத்திலே எங்களுடைய மக்கள் எமது தேசத்தை ஆளுகின்ற முழுமையான சூழலை நோக்கி நாங்கள் விரைவாக முன் னோக்கி முழுமையினை பெறத் தான் போகின்றோம்.

அந்தச் சூழலில் நாங்களும் உலகப் பந்திலே இன்றைக்கு வளர்ச்சியடைந்த அபிவிருத்தியடைந்த தன்நிறைவு கொண்ட தேசங்களின் மக்கள் போன்று எங்களுடைய மக்கள் இந்த மண்ணிலே நிமிர்ந்து முழுக் கௌரவத்துடன், முழுக் உரிமையோடும், நிமிர்வோடும் வாழக்கூடிய சூழலை நோக்கி நாங்கள் விரைவாக முன்னேறிக் கொண்டு வருகின்றோம்.

உண்மையிலேயே எமது மக்கள் மிகுந்த நெருக்கடிகளைச் சந்தித்தார்கள். யுத்தகாலத்திலே அனைத்தும் தடை செய்யப்பட்டிருந்தது.

ஆனால் நாங்கள் உயிர் வாழ்ந்தோம்எங்களுடைய வளங்கள், விவசாயம் கால்நடை, கடல்வளம், சிறு கைத்தொழில் போன்ற வளங்களிலே முயற்சிகளிலோ எமது மக்கள் முழுமையான தங்களது அர்ப்பணிப்பைச் செலுத்தி இருந்தார்கள்.

ஒன்றுமே இல்லாத நேரம் விவசாயத்திற்கான உற்பத்திப் பொருட்கள் அனைத்தும் தடை செய்யப்பட்டிருந்த நேரம் கடலிலே எமது மக்கள் இறங்க முடியாத அச்சுறுத்தலுக்கு உட்பட்டிருந்த நிலையிலும், வயல்களிலே விவசாயம் மேற்கொள்ளும் மக்கள் குண்டு வீச்சுக்களில் அழிக்கப்பட்ட பொழுது எங்களது மக்கள் அத்தகைய அச்சுறுத்தல்களுக்கெல்லாம் முகம் கொடுத்து தங்களைத் காத்து; தமது தேசத்தைக் காத்து; தங்களது மக்களைக் காத்து தங்களது முயற்சிகளிலே மிக உயர்வான நிலையினைப் பெற்று இருந்தார்கள்.

யுத்தம் முடிந்த போது இங்கே வருகை தந்திருந்த வெளிநாட்டுப் பத்திரிகையாளர்கள், வெளிநாட்டு பிரதிநிதிகளில் பெரும்பாலானோர் எமது தாயகத்திற்கு வெளியே இருந்து வந்தவர்கள் எல்லோரும் இங்கே ஒரு யுத்தத்திற்கு முகம் கொடுத்து, அழிந்து கொண்டிருந்த தேசம், அழிந்துகொண்டிருந்த மக்கள் என்ற கற்பனையோடு இங்கே பார்த்தபோது இங்கே இடிபாடுகளையுடைய கட்டடங்களையும், சிதைந்த அடையாளங்களையும் பார்த்தார்களே தவிர, எங்களுடைய மக்களிலே அந்த அழிவைக் காண முடியவில்லை.ஏனெனில் எமது மக்கள் அழி விற்குள்ளும் நிமிர்ந்து நின்றார்கள். அவர்களுடைய முயற்சிதான் அதற்குக் காரணம்.

எமது தேசம் விடுதலையடைந்திடும் காலத்திலே எங்களது வளத்தைக் கொண்டு எமது மக்கள் தமது சொந்தக் காலிலே நிற்கக் கூடிய ஆற்றலைப் பெற்றுவிடுவார்கள் என்பதில் எமக்கு நம்பிக்கை இருக்கின்றது.

நிச்சயம் அது நிறைவேறும் அதற்காக மக்கள் அனைவரும் ஒத்துழைப்பு வழங்குவார்கள் என்று தனது சிறப்புரையில் கூறியுள்ளார்.

(சோ,கு)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 02ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.